**வடமத்திய மாகாண சபை - 2021 ஆம் ஆண்டு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வடமத்திய மாகாண சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2022 நவம்பர் 11 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஒக்டோபர் 13 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வடமத்திய மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடமத்திய மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமத்திய மாகாண சபையின் திறைசேரி நிதிக்கூற்றுக்களில் 1409 செலவின விடயத்திற்குரியதாக செலுத்த வேண்டிய செலவுகள் | ஏற்றுக்கொள்வதாகவும் 2022 ஆண்டின் நிதிக்கூற்றுகளில் செம்மையாக்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | வடமத்திய மாகாண சபையின் அமைச்சு/ திணைக்களங்களால் தயாரிக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்படாத போதும் வடமத்திய மாகாண சபையின் செலவின விடயங்களில் அந்த செலவு விடயத்தில் ரூபா 96,957 தொகை செலுத்த வேண்டிய செலவினம் காண்பிக்கப்பட்டிருந்தது. | | நிதிக்கூற்றுக்களில் தகவல்கள் மற்றும் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களின் தகவல்கள் ஒத்ததாக இருக்க வேண்டும். |
| (ஆ) | மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 13 பிரகாரம் பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியத்தில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திதகியன்று மீதி ரூபா 30,884,283 ஆன போதும் 2020 ஆண்டில் மாகாண சபை 02 திணைக்களங்களினால் 02 வணிக முற்பணம் கணக்குகளிற்குரியதாக பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு அனுப்பியிருந்த ரூபா 6,979,917 தொகை திறைசேரியினால் பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைத்திருக்கவில்லை. அதனால் நிதிக்கூற்றுக்களில் பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியத்தில் மீதி அப்பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாகவும் 2022 ஆண்டின் நிதிக்கூற்றுகளில் செம்மையாக்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | குறித்த திணைக்களத்தினால் வணிக முற்பணக் கணக்குகளிற்குரிய பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு அனுப்பும் நிதி திறைசேரியினால் பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 01 பிரகாரம் 04 மாகாண அமைச்சு/திணைக்களங்களிற்கு உரியதாக வடமத்திய திறைசேரிக்கு தீர்த்திருக்காத ரூபா 27,860,867 ஆன கட்டுநிதி மீதிகள் 04 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவி வருகின்றது. அம் மீதிகளில் 95 சதவீதமான 10 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவி வரும் ரூபா 26,405,861 ஆன மீதியொன்று பிரதான அமைச்சினால் தீர்க்க வேண்டியிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | மாகாண நிதி வதிகள் 259.2 மற்றும் 259.3 பிரகாரம் திசெம்பர் 31 திகதியன்று அமைச்சு/ திணைக்களங்களில் எஞ்சிய கட்டுநிதி மீதிகளை அடுத்த வருட சனவரி 10 ஆம் திகதி அல்லது மாகாண திறைசேரியினால் குறித்தொதுக்கப்படும் தினமொன்றில் மீண்டும் தீர்க்க வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரி உள்ளிட்ட அந்த அந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்.

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும். வேண்டுமென்று விட்டுவிடுதல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான விட்டுவிடுதல்கள் மோசடி ஏற்படுவதற்கு காரணமாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உளள்கக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கருத்துரை

### 1.5.1 தலைப்பு 602 - வடமத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடமத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் வருமான கணக்கீட்டு உததியோகத்தராக கடமையாற்றும் வருமானக் குறியீடு 2003.02.13 கீழான பரீட்சை கட்டண வருமானம் ரூபா 1,000,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் உளள்வாறான வருமானம் ரூபா 4,495,610 ஆகவிருந்தது. அதன் பிரகாரம் குறைமதிப்பீட்டு பெறுமதி ரூபா 3,495,610 ஆனதுடன் அது மதிப்பீட்டு வருமானத்தின் 350 சதவீதமானது | மதிபபீடு அங்கீகரித்த பின்னர் ஆசிரியர்களை ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சைக்காக விண்ணம் கோரப்பட்டதால் இவ் வித்தியாசம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | முடியுமான அளவு நடைமுறை சாத்தியமான மற்றும் சரியாக தங்களது மதிப்பீட்டை தயாரிக்க வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மதிப்பீட்டை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். |

### 1.5.2 தலைப்பு 610 - வடமத்திய மாகாண பிரதம அமைச்சு மற்றும் வடமத்திய மாகாண சட்டம் மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விசேட செயற்திட்டங்கள், சுற்றுலா, கல்வி, தகவல் தொழிநுட்பம், பொறியியல் நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாற்று வலுசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2016 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலத்தில் வடமத்திய மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பொது இடங்களில் மற்றும் சுற்றுலா கவர்ச்சியான இடங்களில் கூட்டுப் பெறுமதி ரூபா 41,787,553 ஆன 646 சூரிய சக்தி வீதி விளக்குகள் வடமத்திய மாகாண பிரதான அமைச்சினால் பொருத்தப்பட்டிருந்தன. பிரதான | பிரதான அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீதி விளக்குகளை பராமரிப்பதற்காக உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் தொல் பொருளியல் திணைக்களத்திற்கு ஒப்படைத்திருந்த | உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் தொல் பொருளியல் திணைக்களத்திற்கு ஒப்படைத்திருந்த இந்த வீதி விளக்குகளின் பராமரிப்பு உரிய முறையில் இடம்பெறுவதாக உறுதி செய்து கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சினால் இந்த 646 சூரிய சக்தி வீதி விளக்குகளை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைத்திருந்த போதும் உள்ளூராட்சி நிறுவனங்களினால் அவற்றை உரிய முறையில் பராமரிப்பதாக, உரிய நியமத்தில் செயற்படுவதாக, அவற்றின் பௌதீக ரீதியான நிலையானதன்மை மற்றும் பாதுகாப்பு தொடர்பாக பின்னூட்டல் செய்வதாக அவதானிக்கப்படவில்லை. இதன் காரணமாக வீதிவிளக்குள் பொருத்தப்படாமை, பொருத்திய பின்னர் கழற்றி அகற்றியுள்ளமை, செயலிழந்தல், திருடர்களால் கழற்றப்படல், வனசீவராசிகளால் சேதப்படுத்தல் மற்றும் வாகன விபத்துக்களினால் சேதமடைதல் போன்ற காரணங்களால் 128 சூரியசக்தி வீதிவிளக்குகள் பயன்பாட்டில் இருக்காததுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 9,124,097 ஆன செலவு விளைவற்றதாக காணப்பட்டது. | போதும் அந் நிறுவனங்களினால் அந்த செயற்பாட்டை உரிய முறைப்படி இக்கடமைகளை செய்யாதமை இந்நிலைமைக்கு காரணமென குறிப்பிடப்பட்டுள்ளது. | பிரதான அமைச்சினால் மேற்பார்வையொன்றை செய்து கொண்டு செல்ல வேண்டும். |
| (ஆ) | அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை கருத்திட்ட ஏற்பாட்டின் மீது மேற்கொண்ட நிர்மாணத்திற்காக அளவை பத்திரம், வேலை பூர்த்தி அறிக்கை மற்றும் பட்டியல் கொடுப்பனவு பொழிப்பு உள்ளிட்ட ஆவணங்களின் மூலப் பிரதிகளின் மீது ஒரு சந்தர்ப்பத்தில் மற்றும் அவ் ஆவணங்களின் நிலற் பிரதிகளின் மீது இன்னுமொறு முறையாக வடமத்திய மாகாண பிரதம அமைச்சினால் இரட்டை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வு மாதிரி பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் 2020 பெப்ரவி 26 அளவில் இரட்டை கொடுப்பனவு மூலம் மோசடியாக பெற்றிருந்த நிதி ரூபா 8,608,290 ஆனது. இம் மொத்த தொகையையும் | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | மொத்த தொகையையும் அறவிட மற்றும் இரட்டை கொடுப்பனவு செய்த அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிட மற்றும் இரட்டை கொடுப்பனவு செய்த அலுவலர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளை பூர்த்தி செய்திருக்கவில்லை. | | |
| (இ) | அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை கருத்திட்ட ஏற்பாட்டை பயன்படுத்தி செயற்படுத்தியிருந்த உடன்படிக்கை தொகை ரூபா 21,946,785 ஆன 02 நிர்மாண ஒப்பந்தங்களிற்காக ரூபா 9,066,775 ஆன வேலை ஆரம்ப முற்பணம் வடமத்திய பிரதம அமைச்சு 2016 ஆண்டு செலுத்தியுள்ள போதும் உடன்படிக்கை பிரகாரம வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்வில்லை. அவ்வாறாயினும் அம் முற்பணத்தை அறவிட மற்றும் உடன்படிக்கை பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்யாத ஒப்பந்ததாரர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | வேலை ஆரம்ப முற்பணத்தை அறவிட மற்றும் உடன்படிக்கை பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்யாத ஒப்பந்ததாரர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | வடமத்திய மாகாணத்தில் சுற்றுலாதுறையின் மேம்பாட்டிற்காக தொழிநுட்ப தரத்திலான அறிக்கை ரீதியான வீடியோ வேலைத் திட்டத்தை தயாரித்தல், கவர்ச்சியான படங்களுடன் கூடிய தரத்திலான புத்தகமொன்றை வடிவமைத்தல் மற்றும் முறையான தகவல்களைக் கொண்ட இணையத்தளம் ஒன்றை வடிவமைப்பதற்காக பிரதான செயலாளரினால் தனியார் வழங்குனர் ஒருவருடன் ரூபா 15,797,500 ஆன தொகையிற்கு 2016 மார்ச் 23 திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்பட்ட தொகையிலிருந்து ரூபா 12,144,500 தொகை 2016 திசெம்பர் 26 திகதியளவில் செலுத்தியிருந்த போதும் 2021 மே 10 திகதியளவிலும் வழங்குனரால் இக் கருத்திட்டத்தை | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | வீடியோ வேலைத்திட்டம், கவர்ச்சியான படங்களுடன் கூடிய தரத்திலான புத்தகம் மற்றும் முறையான தகவல்களைக் கொண்ட இணையத்தளத்தை வழங்குனரால் வழங்குவதற்கு முன்னர் கொடுப்பனவு செய்த அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பூர்த்தி செய்து வடமத்திய மாகாணத்தில் சுற்றுலாதுறை மேம்பாட்டிற்காக பயன்படுத்த முடியுமான வகையில் மாகாண சபைக்கு ஒப்படைத்திருக்கவில்லை. | | |
| (உ) | அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை கருத்திட்டத்தின் கீழ் அ/பதவிய மஹசென் மகா வித்தியாலயத்தின் மூன்று மாடி வகுப்பறை கட்டிடம், சிற்றுண்டிச் சாலை மற்றும் இரண்டு மாடி அதிபர் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிக்கும் 03 கருத்திட்டங்கள் முறையே ரூபா 28,822,475, ரூபா 11,607,260 மற்றும் ரூபா 6,637,937 பெறுமதிகளுடன் ஒப்பந்ததாரர் ஒருவருக்கு வழங்க கட்டளையிடப்பட்டிருந்துடன் ஏற்புக் கடிதம் (Letter of Acceptance) பிரகாரம் 2016 ஆகஸ்ட் 29 திகதி நிர்மாணத்தை ஆரம்பிக்க வேண்டிய போதும் 37 நாட்கள் கடந்து பிரதான அமைச்சினால் 2016 ஒக்டோபர் 04 திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உன்படிக்கை பிரகாரம் அக் கட்டிடங்களின் நிர்மாணத்தை 2017 ஏப்ரல் 04 திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்ய வேண்டியிருந்ததுடன காலநீடிப்பு ஒன்றும் வழங்கப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறாயினும் உடன்படிக்கை காலம் முடிவடைந்து 03 மாதங்கள் முதல் 02 வருட காலத்தினுள் ஒப்பந்ததாரரினால் சமர்பித்திருந்த கூட்டுத் தொகை ரூபா 17,034,747 ஆன 03 பட்டியல்களிற்காக கொடுப்பனவு செய்கையில் ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் அறவிட வேண்டிய ரூபா 4,706,767 ஆன தாமதக் கட்டணத்தை அறவிட்டிருக்கவில்லை. அவ்வாறே கணக்காய்வு திகதிய 2022 ஏப்ரல் 04 திகதியளவில் | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிட மற்றும் இக் கருத்திட்டங்களின் வேலைகளை பூர்த்தி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணங்களை பூர்த்தி செய்ய வேண்டிய தினம் 05 ஆண்டுகள் கடந்திருந்தது. அதன் பிரகாரம் இது வரை கொடுப்பனவு செய்திருந்த கூட்டுத் தொகை ரூபா 19,383,974 ஆன செலவுகள் விளைவற்றிருந்ததுடன் இம் 03 கட்டங்கள் பராமரிப்பின்றி இயற்கை அனர்த்தங்களிற்கு உட்பட்டிருந்தன. | | |
| (ஊ) | அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை கருத்திட்டத்தின் கீழ் அ/பதவிய பராக்கிரமபுற ஆரம்ப வித்தியாலயத்தின் ஆரம்ப கற்கை வள மத்திய நிலைய நிர்மாணங்களை 2017 பெப்ரவரி 04 திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்ய ரூபா 9,280,680 ஆன பெறுமதிக்கு 2016 ஒக்டோபர் 12 திகதி ஒப்பந்ததாரர் ஒருவருடன் பிரதான அமைச்சின் செயலாளர் உடன்படிக்கை செய்திருந்தார். அவ்வாறாயினும் கணக்காய்வு திகதிய 2022 ஏப்ரல் 04 திகதியவில் 05 ஆண்டுகள் கடந்திருந்த அக் கட்டிடத்தின் வேலைகளை பூர்த்தி செய்து ஒப்படைத்திருக்கவில்லை. எனினும் உடன்படிக்கை பிரகாரம் ஒப்பந்ததாரரின் பிணைமுறியை, பணமாக்கி கொள்ள மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்க செயற்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ஒப்பந்ததாரருக்கு செலுத்தியிருந்த ரூபா 1,841,335 ஆன தொகை விளைவற்ற செலவொன்றாக இருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | வேலைகளை பூர்த்தி செய்து ஒப்படைத்திருக்காத ஒப்பந்ததாரருக்கு எதிராக உடன்படிக்கை பிரகாரம் செயற்படல், ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடல் மற்றும் இக் கருத்திட்டங்களின் வேலைகளை பூர்த்தி செய்ய வேண்டும். |
| (எ) | அ/பதவிய மஹசென் ஆரம்ப வித்தியாலயத்தின் பலநோக்கு கட்டிடத்தை நிர்மாணித்தல் 2016 ஒக்டோபர் 06 திகதி முதல் 2017 பெப்ரவரி 05 திகதி வரை 04 மாத காலத்தினுள் பூர்த்தி செய்ய வேண்டியதுடன் கால நீடிப்பும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் தாமத கட்டணம் அறவிடல் மற்றும் இந்த கருத்திட்டங்களில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறாயினும் உடன்படிக்கை காலம் முடிவடைந்து 03 மாதங்கள் முதல் 02 ஆண்டு காலத்தினுள் ஒப்பந்ததாரரினால் சமர்பித்திருந்த கூட்டுத் தொகை ரூபா 4,773,047 ஆன 02 பட்டியல்களிற்கு கொடுப்பனவு செய்யும் போது ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் அறவிட வேண்டிய ரூபா 933,237 ஆன தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கணக்கணாய்வு திகதியான 2022 ஏப்ரல் 04 திகதியன்று நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி 05 ஆண்டுகளுக்கு அதிக காலம் கடந்திருந்த போதும் இந்த கருத்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இதுவரை செலுத்தியிருந்த கூட்டுத்தொகை ரூபா 5,942,219 ஆன செலவினம் விளைவற்று இருந்ததுடன் இந்த கட்டிடங்கள் பராமரிப்பின்றி இயற்கை அனர்த்தங்களுக்கு உட்பட்டிருந்தன. | | |
| (ஏ) | பிரதான அமைச்சின் சிரேஷ்ட மட்டத்தின் 05 வெற்றிடங்கள், இரண்டாம் மட்டத்தில் 25 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 03 வெற்றிடங்கள் 04 ஆண்டுகளுக்கும் அதிக காலமாக நிலவிய போதும் அமைச்சின் கடமைகளை மேற்கொண்டிருந்தது. எனினும் முக்கியமற்ற அவ் ஊழியர் எண்ணிகையை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | முக்கிய இல்லாத அவ் ஊழியர் எண்ணிகையை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஐ) வடமத்திய மாகாண பிரதான அமைச்சு நிதியம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 1992 இன் 5 ஆம் இலக்க பிரதான அமைச்சின் நிதிய விஞ்ஞாபனத்தின் | மாகாண சபை மீண்டும் ஆரம்பித்த பின்னர் | விஞ்ஞாபனத்தை மீள் திருத்த நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | 3(1) பிரிவினூடாக நிதியத்தின் நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் மூலதனம் அதன் கட்டுப்பாட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. நிதியத்தின் கட்டுப்பாட்டு சபை பிரதான அமைச்சர் மற்றும் இரண்டு எதிர்கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட 06 பேர்களுடன் கூடியதானதுடன் மாகாண சபையை கலைக்கப்பட்டதன் பின்னர் நிதியத்தை, நடாத்திச் செல்ல வேண்டிய செயன்முறையை கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடாததால் மாகாண சபையை கலைக்கப்பட்ட 2017 ஒக்தோபர் 01 ஆம் திகதி முதல் நிதியம் செயற்பாடற்றுக் காணப்பட்டது. | விஞ்ஞாபனத்தை மீள் திருத்த நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | எடுக்க வேண்டும். |
| (ii) | வடமத்திய மாகாண பிரதான அமைச்சு நிதியத்தின் ரூபா 4,425,249 ஆன தொகையொன்று நீண்ட காலமாக நிலையான வைப்பொன்றிலும் ரூபா 5,663,736 ஆன தொகையொன்று 2018 ஆண்டு முதல் 04 ஆண்டுகளாக வடமத்திய மாகாண பிரதான அமைச்சு நிதியத்தின் நடைமுறை கணக்கிளும் நிறுத்தி வைக்கப்படடிருந்ததுடன் அத் தொகையை பயன்படுத்தி அந் நிதியத்தை இஸ்தாபித்ததன் மூலம் அடைந்து கொள்ள எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | நிதியத்திலுள்ள நிதியை, அதனை இஸ்தாபித்ததன் மூலம் அடைந்துக்கொள்ள எதிர்பார்த்த நோக்கங்கள் மேற்கொள்ள அல்லது நலங்கள் கிடைக்கும் முதலீட்டு துறையொன்றில் ஈடுபடுத்த ஏனும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 தலைப்பு 611 - வடமத்திய மாகாண உள்ளுராட்சி திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தமன்கடுவ பிரதேச சபை, பொலன்னறுவ பிரதேச சபை மற்றும் பொலன்னறுவ மாநகர சபை எனும் 02 உள்ளூராட்சி நிறுவனங்களாக | இத் தொகை தமன்கடுவ பிரதேச சபையினால் சேகரித்துள்ளதுடன் | ரூபா 1,034,955 ஆன தொகையை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | பிரிக்கையில் தமன்கடுவ பிரதேச சபையின் 03 வங்கிக் கணக்குகளிற்குரிய ஆவணங்கள் வடமத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டிருந்த போதும் அக் கணக்குகளை தீர்த்து அவற்றிலிருந்த ரூபா 1,034,955 ஆன தொகையை பொலன்னறுவ பிரதேச சபை மற்றும் பொலன்னறுவ மாநகர சபைக்கு வழங்கியிருக்காததுடன் அத் தொகையை 2022 ஜுன் 15 திகதியளவிலும் அக் கணக்குகளில் பயன்படுத்தாது காணப்பட்டது. | அங்கு தவிசாளர் இத் தொகையின் ஒரு பகுதியை பொலன்னறுவ மாநகர சபைக்கு வழங்க எதிர்ப்பு தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | நெடுந்தூர போக்குவரத்து சேவை பேரூந்து தரிப்பிடமொன்றை நிர்மாணிக்கும் நோக்கில் பகமூன மகாவெலி விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக உள்ள காணியில் அமைந்துள்ள கருங்கல்லை உடைத்தகற்ற சபை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல், சாத்தியப்பாட்டு ஆய்வை மேற்கொள்ளல், மதிப்பீடு தயாரித்தல், சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளல் முறையான நிதி நடைமுறையை பின்பற்றுதல் போன்ற செயன்முறைகளை பின்பற்றாது 2015 – 2018 காலப் பகுதியினுள் எலஹெர பிரதேச சபையினால் ரூபா 15,675,708 ஆன தொகையை செலவிட்டிருந்த போதும் குறித்த பேரூந்து தரிப்பிடத்தை நிர்மாணித்திருக்கவில்லை.<br>எவ்வாறாயினும் அது தொடர்பாக வடமத்திய மாகாண உள்ளூராட்ச்சி திணைக்களத்தினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | ஒழுங்கான நிதி நடைமுறையை பின்பற்றாது பணம் செலவிட்ட அலுவலரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.4 தலைப்பு 612 - வடமத்திய மாகாண கல்வி திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 முதல் 2020 வரையான 05 வருட காலப்பகுதியினுள் க.பொ.த.(சா/த) பரீட்சை பெறுபேறுகளில் மாகாணங்கள் பிரகாரம் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் 05 ஆம் இடத்திலிருந்த வடமத்திய மாகாணம் 2020 ஆண்டில் 07 ஆவது இடம் வரை பின்னடைந்திருந்தது. அவ்வாறே அக்காலப் பகுதியில் க.பொ.த.(உ/த) பரீட்சை பெறுபேறுகளில் மாகாணங்கள் பிரகாரம் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் 07 ஆம் இடத்திலிருந்த வடமத்திய மாகாணம் 2020 ஆண்டில் 08 ஆவது இடம் வரை பின்னடைந்திருந்த போதும் மாகாண பரீட்சை பெறுபேறுகளை அதிகரிக்க பாடசாலை மட்டத்தில் வரவேற்கத்தக்க வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி இருக்கவில்லை. | உலகளாவிய கொவிட் தொற்று காரணமாக திட்டமிட்ட நிகழ்சித் திட்டங்களை அவ்வாறே செயற்படுத்த முடியாது போனதால் இந் நிலைமை ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | மாகாண பரீட்சை பெறுபேறுகளை அதிகரிக்க பாடசாலை மட்டத்தில் வரவேற்கத்தக்க வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி பேணிச் செல்ல வேண்டும். |
| (ஆ) | வடமத்திய மாகாண பாடசாலைகளில் ஆசிரியர் மற்றும் அதிபர் வெற்றிடங்கள் காணப்படும் போது 58 ஆசிரியர்களை 01 மாதம் 27 வருடம் வரையான காலமொன்றாக வேறு நிறுவனங்களிற்கு விடுவித்திருந்ததுடன் விடுவித்த திகதி முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலப் பகுதிக்காக அவர்களிற்கு கொடுப்பனவு செய்திருந்த ரூபா 147,348,894 ஆன சம்பளம் மற்றும் படிகளை அவ் ஆசியர்கள் இணைக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து மீள்நிரப்பியிருக்கவில்லை. அவ்வாறே ஏனைய நிறுவனங்களிற்கு விடுவித்துள்ள ஆசிரியர்களுக்கு சம்பளம் செலுத்தும் போது அவர்களின் சேவை வரவு மற்றும் விடுமுறை பற்றிய விபரங்கள் கட்டாயமாக | அநுராதபுற கல்வி வலையத்தில் 02 ஆசிரியர்களிற்குரியதாகவும், ஹிங்குரங்கொட 04 ஆசிரியர்களிற்குரியதாகவும் சம்பளம் மீள்நிரப்பப்படுவதுடன் தேசிய மாணவ படைப் பிரிவிற்கு இணைக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர்களின் சேவை நேரடியாக பாடசாலைகளுக்கு கிடைப்பதால் பாதுகாப்பு அமைச்சின் செலவின | வெற்றிடங்கள் நிலவுகையில் வடமத்திய மாகாண பாடசாலை ஆசிரியர்களை வேறு நிறுவனங்களிற்கு விடுவிக்கக் கூடாததுடன் விடுவித்துள்ள ஆசிரியர்களிற்குரியதாக செலுத்தியுள்ள சம்பளத்தை மீள்நிரப்பிக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறப்பட வேண்டுமென 2021 ஜுன் 30 திகதிய வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளரின் கடிதம் மூலம் ஆலோசனை வழங்கியுள்ள போதும் 55 ஆசிரியர்களின் வரவு மற்றும் விடுமுறை அறிக்கைகள் மற்றும் விடுவிக்கப்பட்ட நிறுவனங்களினால் செலுத்தியுள்ள படிகள் தொடர்பான அறிக்கைகளை பெற்றிருக்கவில்லை. | தலைபிலிருந்து அவர்களின் சம்பளத்திற்காக ஏற்பாடு ஒதுக்கிக் கொள்ள இயலுமையில்லை என பாதுகாப்பு அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (இ) | தாபன விதிக்கோவை II அத்தியாயத்தின் 11.2.3 உப பிரிவின் பிரகாரம் தகுதிகாண் காலத்திலுள்ள அலுவலர் ஒருவரின் தகுதிகாண் காலம் முடிவில் அவன்/அவள் சேவையில் நிரந்தரமாக்க அல்லது தகுதிகாண் காலத்தை நீடிக்க அல்லது தகுதிகாண் நியமனத்தை முடிவுறுத்த அல்லது திணைக்கள தலைவர் செயற்பட வேண்டிய போதும், 1987 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான காலத்தினுள் ஆசிரியர் சேவையிற்கு நியமனம் வழங்கப்பட்டிருந்த 239 ஆசிரியர்களின் சேவையை நிரந்தரமாக்க 2021 திசெம்பர் 31 திகதியளவிலும் மாகாண கல்வி பணிப்பாளர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தபுத்தேகம வலயத்தில் 04 ஆசிரியர்களுக்கும், கெகிராவ வலயத்தில் ஒரு ஆசிரியருக்கும், கெபதிகொள்ளாவ வலயத்தில் 39 பேர்களிற்கும் உரிய கோவைகள் பூரணப்படுத்தப்பட்டு நிரந்தரமாக்க மாகாண அரச சேவை ஆணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவை II அத்தியாயத்தின் 11.2.3 உப பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கெபிதிகொள்ளேவ, தபுத்தேகம மற்றும் கெகிராவ கல்வி வலயங்களிற்குரிய 13 பாடசாலைகளில் 61 ஆசிரியர்களின் தர உயர்வுகளை வழங்க ஓராண்டிற்கும் அதிக காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக 78 ஆசிரியர்கள் தொடர்பாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது. | 03 மாதங்களுக்குள் குறித்த உயர்வுகளை வழங்க நடவடிகை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | அனைத்து ஆசிரியர்களிற்கும் உரிய காலத்தினுள் உயர்வுகளை வழங்க வேண்டும். |
| (உ) | 2014 ஆண்டில் கொடையாளி ஒருவரினால் ஹொரொவ்பதான துடுவெவ வித்தியாலயத்திற்கு குழாய் கிணற்றிகாக வழங்கியிருந்த நீர் உந்தி, கணக்காய்வு | ஆரம்ப புலன்விசாரணை ஒன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துக் | வலய கல்வி அலுவலகத்தை அறியப்படுத்தல், பொலிஸில் முறைப்பாடு |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனை திகதிய 2022 சனவரி 11 திகதி காணாமல் போயிருந்த போதும் அது தொடர்பாக வலய கல்வி அலுவலகத்திற்கு அறியப்படுத்தல், பொலிஸில் முறைப்பாடு செய்தல் மற்றும் நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் அதிபரினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொண்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | செய்தல் மற்றும் நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ள வேண்டும். |
| (ஊ) | ஹொரொவ்பதான துடுவெவ வித்தியாலயத்தில் 80’ x 20’ அளவிலான வகுப்பறை கட்டிடமொன்றை ரூபா 2,380,500 ஆன தனிப்பட்ட நிதி நன்கொடையினால் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | இக் கட்டிடத்தை நிர்மாணிக்க 2019 ஒக்டோர்பர் 23 திகதி பிரதான அமைச்சின் செயலாளரினால் அங்கீகாரம் வழங்கி, அதன் நிர்மாணம் திணைக்கள அளவுத் திட்டத்தின் கீழ் மற்றும் கட்டிட பொறியியலாளரின்/ தொழிநுட்ப அலுவலரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியிருந்த போதும் திணைக்கள அளவுத்திட்டத்திற்கு இணங்காத வகையில் மற்றும் கட்டிட பொறியியலாளரின்/ தொழிநுட்ப அலுவலரின் மேற்பார்வை இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | பிரதான அமைச்சின் செயலாளரின் ஆலோசனைகளுக்கு மற்றும் திணைக்ள அளவுத் திட்டங்களிற்கு இணங்க நிர்மாணம் மேற்கொள்ள வேண்டும். |
| (ii) | நிர்மாணத்திற்காக பண்டங்களை கொள்வனவு செய்வதற்காக நியமிக்கப்பட்டிநருந்த அதிபர் உட்பட 12 பேர்களை கொண்ட குழுவினால் பிரதான அமைச்சின் செயலாளர் அங்கீகரித்த மதிப்பீட்டு அளவை விஞ்சி ரூபா 120,700 பெறுமதியான 18.4 மணல் கியுப்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | பிரதான அமைச்சின் செயலாளர் அங்கீகரித்த மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள அளவை விஞ்சி கொள்வனவு செய்யக்கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 03 அடி 06 அங்குல தாழ்வாரத்துடன் அமானோ தகடுகள் இட்டு கூரையை மூடுவதற்கு 02 அடி 06 அங்குல இடைவெளியிற்கு 19 அடி நீலத்திற்கு 56 உருக்கு பர்லின்களில் 12 வரிகளை இடுவதற்கு மதிப்பீட்டில் இலக்கம் 06 வேலை விடயத்தில் அங்கீகரித்துள்ள போதும் அதற்கு மாற்றமாக 03 அடி 09 அங்குல இடைவெளியுடன் 08 பர்லின் வரிகள் இடப்பட்டிருந்தன. அவ்வாறே அதன் மீது எஸ்பெஸ்டொஸ் சீட் மூடப்பட்டிருந்ததுடன் கூரைக்கு பயன்படுத்தாத 19 அடி உருக்கு பர்லின் 19 இனை மீண்டும் ரூபா 73,682 இற்கு விற்பனை செய்து அத் தொகையில் ரூபா 30,500 மாத்திரம் 2020 பெப்ரவரி 14 திகதி பாடசாலை அபிவிருத்தி சங்க கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 43,182 தொகை அதிபரினால் துஸ்பிரயோகம் செய்யப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (iv) | அங்கீகார மதிப்பீட்டின் இலக்கம் 17 வேலை விடயத்தின் கீழ் கட்டிடத்தின் கூரை விலிம்பில் 90 அடிகள் மூடிப்படும் வகையில் ZN/AL Colour bond ridge capping இடுவதற்கு ரூபா 12,000 செலவில் 100 அடி நீலம் மற்றும் 02 அடி அகலமான தகரம் ஒரு ரோல் கொள்வனசு செய்யப்பட்டிருந்த போதும் அத் தகடு ரோலை கட்டிடத்தின் கூரைக்கு பயன்படுத்தாது அதனை கொள்வனவு செய்த நிறுவனத்திற்கே மீண்டும் விற்பனை செய்து பணத்தை பெற்று அதிபரினால் துஸபிரயோகம் செய்யப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | முறைகேடுகளை மேற்கொண்ட அலுவலரிற்கு எதிராக செயற்பட வேண்டும். |
| (v) | கல்வி அமைச்சின் செயலாளரின் 2015 சனவரி 29 திகதிய இலக்கம் 05/2015 கொண்ட சுற்றறிக்கை பிரகாரம் பாடசாலைகளில் முறையற்ற விதத்தில் பணம் அறவிடல் தடுக்கப்பட்டுள்ள போதும், இப் புதிய கட்டிடத்தை நிர்மாணிக்க | பதில் வழங்கப்படவில்லை. | கல்வி அமைச்சின் செயலாளரின் 2015 சனவரி 29 திகதிய இலக்கம் 05/2015 கொண்ட சுற்றறிக்கை பிரகாரம் முறையற்ற |

| | | | |
|---|---|---|---|
| | பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளைகளின் குடும்பங்களிலிருந்து ரூபா 400 வீதம் கூட்டுத் தொகை ரூபா 60,000 ஆன தொகையை அதிபரினால் சேகரிக்கப்பட்டள்ளதாகவும், அதற்காக பற்றுச் சீட்டு வழங்கவில்லை எனவும், அப் பணம் காணமல் போயுள்ளதாகவும், 2020 ஆகஸ்ட் 17 திகதி இடம்பெற்ற பாடசாலை அபிவிருத்தி சங்க கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. | | விதத்தில் பணம் அறவிட இயலாதிருக்கையில் பணம் அறவிட்ட அலுவலரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | மாகாண கல்வி திணைக்களத்தினால் 2021 ஆண்டில் பூர்த்தி செய்ய திட்டமிட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 4,000,000 ஆன 02 பாடசாலை கட்டிட நிர்மாண கருத்திட்டங்கள் மணுதாரர்கள் ஆவணங்களை குறைபாட்டுடன் சமர்பித்திருந்ததால் மேற்கொள்ளாது கைவிடப்பட்டிருந்தன. | 02 கருத்திட்டங்களிற்கு உரியதாக விலைமணு சமர்பித்திருந்த மணுதாரர்கள் தேவையான ஆவணங்களை குறைபாட்டுடன் சமர்பித்திருந்ததால் இக் கருத்திட்டங்கள் 2022 ஆண்டின் அபிவிருத்தி திட்டத்திற்கு உட்படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | மணுதாரர்களிடமிருந்து குறைபாடுகளின்றி ஆவணங்களை பெற்று அல்லது மீண்டும் விலைமணு கோரியேனும் குறித்த கருத்திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டும். |
| (ஏ) | 2021 ஆண்டில் மேற்பார்வை செய்ய திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த கெகிராவ மற்றும் கெபதிகொள்ளேவ கல்வி வலயங்களில் 140 பாடசாலைகளில் 27 பாடசாலைகளில் மாத்திரம் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் முன்னேற்றம் 19 சதவீத மட்டத்தில் நிலவியது. | பல காரணங்களால் பாடசாலைகள் மூடப்பட்ட காரணத்தால் மேற்பார்வை நடவடிக்கைகள் குறைந்த மட்டத்தில் நிலவியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | திட்டமிட்டுள்ளவாறு அதிக அளவான பாடசாலைகளை மேற்பார்வை செய்ய வேண்டும். |
| (ஐ) | 2021 ஆண்டில் தபுத்தேகம, கெகிராவ மற்றும் கெப்பதிகொள்ளேவ கல்வி வலயங்களில் மீளாய்விற்குட்படுத்தியிருந்த 41 பாடசாலைகளில், 38 பாடசாலைகளில் தர குறியீட்டு பெறுமதி 70 சதவீதத்திலும் குறைந்த மட்டத்தில் நிலவியது. | அடிக்கடி பாடசாலைகள் மூடப்பட்ட காரணத்தால் சுய மதிப்பீட்டைப் போன்றே வெளிவாரி மதிப்பீடும் குறைந்தமை இந் | தர குறியீட்டு பெறுமதி 70 சதவீதத்திலும் கூடிய பாடசாலைகளின் பரீட்சை பெறுபேறுகளும் கூடிய மட்டத்தில் காணப்பட்டதால் அக் குறியீட்டு பெறுமதியை |

| | | | |
|---|---|---|---|
| | | நிலைக்கு காரணமாக அமைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. | அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | வடமத்திய மாகாண கல்வி திணைக்களத்தில் 592 பாடசாலைகளிற்கு சொந்தமான 1510 ஆசிரிய மற்றும் அதிபர் விடுதிகளில் 831,004 வர்க்க அடி ஆன 981 ஆசிரியர் விடுதிகள் திருத்த வேண்டிய நிலையிலும், 206,719 வர்க்க அடி 225 ஆசிரிய விடுதிகள் பாவனைக்கு பொருத்தமற்ற நிலையிலும் காணப்பட்ட போதும் தேவைப்பாட்டை இனங்கண்டு அவ் ஆசிரியர் விடுதிகளை திருத்தி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | இவ் ஆசிரியர் விடுதிகளின் அநேகமானவைகள் தற்போது தேவையற்றதாக காணப்படுவதால் தேவையிருப்பின் மாத்திரம் திருத்த நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | தேவைப்பாட்டை இனங்கண்டு ஆசிரியர் விடுதிகளை திருத்தி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியன்று வடமத்திய மாகாண கல்வி திணைக்களத்தில் 03 பாடசாலைகளில் கடமையாற்றும் 11 ஆசிரியர்களிடமிருந்து ரூபா 871,490 ஆன ஆசிரிய வீட்டு வாடகை அறவிட்டிருக்காததுடன் வாடகை அறவிடப்படாத காலப் பகுதி 01 ஆண்டு முதல் 06 ஆண்டுகள் வரையானது. | குறித்த வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | ஆசிரிய விடுதிகளில் வசிக்கும் அனைத்து ஆசிரியர்களிடமிருந்தும் வீட்டு வாடகை அறவிட வேண்டும். |
| (ஔ) | மாகாண கல்வித் திணைக்களத்தினால் இனங்கண்டிருந்த 08 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ள 20 நிலைபோறான இலக்குகள் அமைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 18 இலக்குகளை அடைந்து கொள்ள மிளாய்வாண்டில் ரூபா 89,836,241 செலவிட்டு 15 கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறாயினும் திறன்விருத்தியடைந்த விஷேட கல்வி மாணவர் எண்ணிக்கையை உயர்த்துதல் மற்றும் பதிமூன்று வருட தொடர் கல்வி அபிவிருத்தி நிகழ்சித் திட்டத்தை செயற்படுத்துதல் எனும் 02 இலக்குகளை அடைந்து கொள்ள எவ்வித | பதில் வழங்கப்படவில்லை. | ஒவ்வொறு இலக்குகளையும் அடைந்து கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கருத்திட்டத்தையும் செயற்படுத்தி இருக்கவில்லை. | | |
| (க) | வடமத்திய மாகாண 293 பாடசாலைகளுக்கு தரத்துடனான அதிபர்களை இணைக்காத காரணத்தால், அதிபர் பதவியில் கடமை மேற்கொள்ள ஆசிரியர்களுக்கு பதில் கடமை நியமனம் வழங்கப்பட்டிருந்த போதும், 217 பாடசாலைகளில் பிரதி அதிபர் பதவிகளில் கடமை மேற்கொள்ளும் தரத்துடனான அதிபர்கள் வெற்றிடங்கள் நிலவும் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்து அதிபர் பதவிகளில் கடமை மேற்கொள்ள கவனம் செலுத்தியிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | மாகாணத்தில் சில பாடசாலைகளில் பிரதி அதிபர் பதவிகளில் கடமை மேற்கொள்ளும் தரத்துடனான அதிபர்களை வெற்றிடங்கள் நிலவும் பாடசாலைகளுக்கு இடமாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (கா) | வடமத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் விடய இலக்கம் 61211 (அலுவலக ஆளணி) கொண்ட அரச ஊழியர்களின் முற்பணக் கணக்கில் 2021 திசெம்பர் 31 திகதியன்று வடமத்திய மாகாண சபையின் அமைச்சு/திணைக்களங்களிற்கு இடமாறிச் சென்ற 39 அலுவலர்களுக்கு, ஏனைய மாகாண சபைகளில் மாகாண அமைச்சு மற்றும் திணைக்களங்களிற்கு இடமாறிச் சென்ற 04 அலுவலர்களுக்கு, சேவையாற்றிக் கொண்டிருக்கும் போது மரணித்த ஒரு அலுவலருக்கு, ஓய்வு பெற்றுள்ள 05 அலுவலர்களுக்கு, கடமையை விட்டுச் சென்ற இரண்டு அலுவலர்களுக்கு மற்றும் வேலை தடை செய்த இரண்டு அலுவலர்களுக்குரியதாக கூட்டுத் தொகை ரூபா 6,978,844 ஆன கடன் மீதிகள் 03 மாதங்களிற்கும் 07 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமாக அறவீடு நிலுவையாக காணப்பட்டது. அவ்வாறே வடமத்திய மாகாண சபையிற்கு ஏனைய மாகாண சபையின் அமைச்சு/திணைக்களங்களில் இருந்து இடமாற்றம் பெற்று வந்த 08 | 12 அலுவலர்களிற்கு உரியதாக ரூபா 1,580,247 ஆன தொகையொன்று அறவிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையினூடா அறிமுகப்படுத்தியுள்ள வழிகாட்டியினால் விதிக்கப்பட்டுள்ளவாறு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலர்களுக்குரியதாக ரூபா 1,046,606 ஆன கடன் மீதியொன்றை தீர்க்க நடவடிக்கை எடுக்காது 03 மாதங்களிற்கும் 07 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் கடந்திருந்தது. எவ்வாறாயினும் அந்த கடன் மீதிகள் 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையினூடாக அறிமுகப்படுத்தியுள்ள வழிகாட்டியினால் விதிக்கப்பட்டுள்ளவாறு தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாத்தின் 1:6, 1:7, 4:2:2, 4:2:4, 4:2:5, 4:5, 4:6 மற்றும் 6:3 பிரிவுகளின் ஏற்பாடுகள், 2004 ஒக்டோபர் 11 திகதிய இலக்கம் 118 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் 1.1.7 பந்தியின் ஏற்பாடுகள் மற்றும் 2019 ஜுன் 27 திகதிய இலக்கம் 05/2019 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 03(உ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (கி) | வடமத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் விடய இலக்கம் 61201 (பாடசாலை ஆளணி) கொண்ட அரச ஊழியர்களின் முற்பணக் கணக்கில் 2021 திசெம்பர் 31 திகதியன்று வடமத்திய மாகாண சபையின் அமைச்சு/ திணைக்களங்களிற்கு இடமாறிச் சென்ற 91 அலுவலர்களுக்கு, ஏனைய மாகாண சபையின் அமைச்சு/திணைக்களங்களிற்கு இடமாறிச் சென்ற 505 அலுவலர்களுக்கு, மத்திய அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுக்கு இடமாறிச் சென்ற 295 அலுவலர்களுக்கு, கடமையாற்றிக் கொண்டிருக்கையில் மரணித்த 21 அலுவலர்களுக்கு, ஓய்வு பெற்ற 146 அலுவலர்களுக்கு, வேலைத் தடை செய்யப்பட்ட 20 அலுவலர்களுக்கு, சேவையை விட்டுச் சென்ற 19 | 64 அலுவலர்களிற்கு உரிய ரூபா 7,206,060 ஆன தொகையொன்று அறவிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையினூடா அறிமுகப்படுத்தியுள்ள வழிகாட்டியினால் விதிக்கப்பட்டுள்ளவாறு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அலுவலர்களுக்கு மற்றும் தகவல்களை வெளிப்படுத்திக் கொள்ள முடியாத 93 அலுவலர்களிற்குரியதான கூட்டத் தொகை ரூபா 75,454,646 ஆன கடன் மீதிகள் 03 மாதங்களிற்கும் 31 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமொன்று அறவீடு நிலுவையாக உள்ளது. அவ்வாறே ஏனைய மாகாண சபையின் அமைச்சு/ திணைக்களங்களங்களில் இருந்து இடமாற்றம் பெற்று வந்த 13 அலுவலர்களுக்கு மற்றும் மத்திய அரசின் அமைச்சு, திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த 295 அலுவலர்களிற்குரிதான ரூபா 26,454,817 ஆன கடன் மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்காது 03 மாதங்களிற்கும் 24 ஆண்டு காலமொன்று கடந்திருந்தது. அவ்வாறாயினும் அக் கடன் மீதிகள் 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தியுள்ள வழிகாட்டியில் விதிக்கப்பட்டுள்ளவாறு தாபன விதிக்கோவையின் xxiv ஆவது அத்தியாயத்தில் 1:6, 1:7, 3:18, 4:2:2, 4:2:4, 4:2:5, 4:5, 4:6 மற்றும் 6:3 பிரிவுகளின் ஏற்பாடுகள், 2004 ஒக்டோபர் 11 திகதி இலக்கம் 118 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கைளின் 1.1.7 பந்தியின் ஏற்பாடுகள் மற்றும் 2019 ஜுன் 27 திகதி இலக்கம் 05/2019 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 03(உ) பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

| | சட்டம், விதி மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | -------------------------------- | ------------------------------- | ----------------------------------- | ------------------ |
| (கீ) | 2018 மே 24 திகதிய இலக்கம் 07/2018 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் 10(I) உப பிரிவு | அரச அலுவலர்கள் ஓய்வு பெறும் திகதி அல்லது அதன் பின்னர் ஒரு வாரத்திற்குள் ஓய்வூதிய கோவையை சரியாக தயாரித்து குறித்த பிரதேச செயலகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் கெபதிகொள்ளேவ வலய அலுவலகத்தினால் 30 ஆசிரியர்களின் ஓய்வூதிய கோவைகள் பிரதேச செயலகங்களிற்கு அனுப்ப 03 மாதங்களிற்கும் 13 மாதங்களிற்கும் இடையிலான காலம் கடந்திருந்தது. | தபுத்தேகம மற்றும் கெகிராவ வலய கல்விக் காரியாலயங்களில் ஆசிரியர்களின் கோவைகள் பிரதேச செயலகங்களிற்கு அனுப்பியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | அரச அலுவலர்கள் ஓய்வு பெறும் திகதி அல்லது அத்திகதியிருந்து ஒரு வாரத்திற்குள் ஓய்வூதிய கோவையை சரியாக தயாரித்து குறித்த பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். |

**(கு) வடமத்திய மாகாண கல்வி அபிவிருத்தி நிதியம்**

-----------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------------- | ------------------------------ | -------------- |
| வடமத்திய மாகாண கல்வி அபிவிருத்தி நிதியத்தில் ரூபா 13,000,000 ஆன தொகையொன்று நீண்ட காலமாக நிலையான வைப்பொன்றில் முதலீடு | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | நிதயத்தை உருவாக்கியதால் அடைய எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்ததுடன் அப் பணத்தை பயன்படுத்தி அந் நிதயத்தை உருவாக்கியதால் அடைய எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.5 தலைப்பு 620 - வடமத்திய மாகாண விவசாய, விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதார மற்றும் மீன்பிடி அலுவல்கள் அமைச்சு

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------- | ------------------------------ | ------------- |
| (அ) | திருப்தியான மற்றும் சுபீட்சமான விவசாய சமூகமொன்று, முன்னேற்றமான பிரதேசமொன்றை நோக்காகக் கொண்ட வடமத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் கீழ் வடமத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் வடமத்திய மாகாணத்தில் பயிர்ச்செய்கை கிணறுகளை நிர்மாணித்தல் மற்றும் புனரமைக்கும் கருத்திட்டத்தை செயற்படுத்தியிருந்ததுடன் அதற்காக செலவிட்டிருந்த தொகை ரூபா 17.7 மில்லியன்களாகும். 42 பயிர்ச்செய்கை கிணறுகளை புதிதாக நிர்மாணித்திருந்ததுடன் வெட்டப்பட்டிருந்த 35 பயிர்ச்செய்கை கிணறுகள் புனரமைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக 10 பயிர்ச்செய்கை கிணறுகளின் மாதிரி பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு. | | |
| (i) | 2021 ஜுலை 09 திகதிய இலக்கம் NCP/GOV/8/1/1 கொண்ட பயிர்ச்செய்கை கிணற்றை நிர்மாணித்தல்/புனரமைப்பு | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | 2021 ஜுலை 09 திகதிய இலக்கம் NCP/GOV/8/1/1 கொண்ட ஆளுனரின் |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்குரியதாக ஆளுனர் செலயலாளரினால் வெளியிடப்பட்ட கடிதத்தில் 04 பந்தி பிரகாரம் வெட்டப்பட்டுள்ள/இடிந்து விழுந்துள்ள கிணறொன்றை கட்டுவதற்கு ரூபா 200,000 செலுத்த முடியுமான போதும் இரண்டு பயன்பாட்டாளர்களிற்கு அதன் எல்லையை மீறி ரூபா 350,000 செலுத்தப்பட்டிருந்தன. | | செலயலாளரினால் வெளியிடப்பட்ட கடிதம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நீர் பாசன வாய்கால்களிலிருந்து நீரை பெற்றுக் கொள்ள முடியுமான கெகிராவ விவசாய ஆலோசகர் பிரிவின் 02 விவசாயிகளுக்கு ரூபா 200,000 தொகையை பயிர்ச்செய்கை கிணறு நிர்மாணித்தலிற்காக செலுத்தப்பட்டிருந்தது. | சிறுபோகத்திற்கு நீரை பெற்றுக் கொள்ள இந்த பயிர்ச்செய்கை கிணற்று உதவி வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | ஒரு போகத்திற்காவது நீரை பெற்றுக் கொள்ள முடியாத காணிகள் அதிகமாக காணப்படுவதால் அக் காணிகளிற்காக பயிர்ச்செய்கை கிணற்று உதவி வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாகாணத்தில் சேதன உணவு உற்பத்தியை உயர்த்துவதன் மூலம் வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் நச்சு இரசாயன மூலக்கூறு அற்ற உணவுகளை நுகர்வோருக்கு வழங்கி ஆரோக்கிமான, சுகாதார பரம்பரையொன்றை உருவாக்கும் நோக்கில் உயர் தரத்திலான சேதன பசளை உற்பத்திக்காக இரண்டு சில்லு (02) டெக்டர்களை பொறுத்தக்கூடிய துண்டாக்கும் 21 இயந்திரங்களை, ஒன்று ரூபா 682,500 வீதமும், நான்கு சில்லு (04) டெக்டர்களை பொறுத்தக்கூடிய துண்டாக்கும் 90 இயந்திரங்களை, ஒன்று ரூபா 710,000 வீதமும் கொள்வனவு செய்ய ரூபா 77,572,500 தொகை மாகாண விவசாய அமைச்சினால் செலவிடப்பட்டிருந்ததுடன் அவ் இயந்திரங்களை பயன்பாட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 06 இயந்திரங்கள் | கருத்திட்டத்தை செயற்படுத்திய பின்னர் விவசாயிகளினால் சேதன பசளை பாவனையை புறக்கனித்ததால் உற்பத்தி செய்த பசளைகள் விற்பனை செய்து கொள்ள முடியாமையினால் கருத்திட்டம் தோல்வியடைந்துள்ளது. | மாகாண விவசாய அமைச்சினால் செலவிடப்பட ரூபா 77,572,500 தொகை விளைவற்றதல்லாது இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

சேதன பசளை உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டு இருக்காததுடன் ஒரு இயந்திரத்தை பயன்பாட்டாளர் ஒருவரினால் தனது பயிர்ச் செய்கைக்கு தேவையான சேதன பசளைகளை மாத்திரம் உற்பத்தி செய்ய பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே பசளைகளின் தரத்தை பரிசோதிக்க திட்டவட்டமான முறைமையொன்றை தயாரித்திருக்காததால் 02 இயந்திரங்களினால் உற்பத்தி செய்யும் சேதன பசளைகளை விற்பனை செய்ய முடியாதிருந்ததாக 11 இயந்திரங்களின் மாதிரி பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதுடன் உற்பத்தி செய்யப்படும் சேதன பசளைகளிற்காக நிலையான விலையொன்று இல்லாதுள்ளமை, அவற்றை கொள்வனவு செய்ய மற்றும் விவசாயிகளிற்கு விநியோகிக்க முறைமையொன்றை அமைச்சினால் தயாரித்திருக்காமை காரணமாக அப் பசளைகள் குறித்த பயன்பாட்டாளர்களால் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) வடமத்திய மாகாணத்தில் நிலவும் வறுமையை குறைக்க உதவும் நோக்கில் வடமத்திய மாகாணத்தில் அலங்கார மீன் உற்பத்தியாளர்களுக்கு நிவாரண உதவி அடிப்படையில் உபகரணங்களை வழங்கும் கருத்திட்டத்திற்காக மாகாண விவசாய திணைக்களத்தினால் 2021 ஆண்டில் பயன்பாட்டாளர் பங்களிப்பு உள்ளடங்களாக ரூபா 17,657,686 செலுத்தி 150 செவன வலைகள், 250 சுற்றுப் பாதுகாப்பு வலைகள், 283 பறவை வலைகள் மற்றும் 1200 GI குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பாரியளவிலான 04 அலங்கார மீன் உற்பத்தியாளர்களிற்கும்

பாரியளவிலான உற்பத்தியாளர்களால் சிறிய அளவிலான உற்பத்தியாளர்களின் அலங்கார மீன்களையும் கொள்வனவு செய்து ஏற்றுமதியாளர்களுக்கு வழங்குவதன் மூலம் சிறிய அளவிலான உற்பத்தியாளர்களுக்கு கூடுதலான நலன்களை கிடைப்பதால் பாரியளவிலான உற்பத்தியாளர்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டதாக

சிறிய அளவிலான உற்பத்தியாளர்களின் அலங்கார மீன்களை கொள்வனவு செய்து பாரியளவிலான உற்பத்தியாளர்கள் இலாபமொன்றை ஈட்டுவதால் பாரியளவிலான அலங்கார மீன் உற்பத்தியாளர்களுக்கு அந்த உபகரணங்கள், நிவாரண உதவியின் அடிப்படையில் பகிர்தளிப்பது அவசியமற்றது.

| | | | |
|---|---|---|---|
| | அவ் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமை மாதிரி கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. பாரியளவிலான வியாபாரிகளுக்கு இந்த உபகரணங்களை பகிர்ந்தளிப்பதால் பிரதேசத்தில் நிலவும் வறுமையை குறைக்கும் நோக்கம் நிறைவேறுவதில்லை என அவதானிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (ஈ) | வடமத்திய மாகாண விவாசாயத் திணைக்களத்தனால் செயற்படுத்தியிருந்த நன்நீர் மீன் மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நன்நீர் மீனவர்களுக்கு வழங்குவதற்காக 2021 ஆண்டில் 119 தோணிகள் மற்றும் 23 குல்லாக்களை ரூபா 9,068,126 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மீனவர்களுக்கு வழங்கப்படும் இந்த உபகரணங்களை பிரருக்கு வழங்காது மீனவ கைத்தொழிலில் ஈடுபடுத்த வேண்டிய போதும் சில மீனவர்களினால் அந்த உபகரணங்களை பிரருக்கு வழங்கியிருந்ததுடன் சில உபகரணங்கள் பல காரணங்களால் நன்நீர் மீனவ கைத்தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் அந்த உபகரணங்களை மீள்பெற்றுக் கொண்டு வேறு மீனவர்களுக்கு வழங்க நடவடிககை எடுத்திருக்கவில்லை. | தென்மேல் பருவக் காலத்திற்கு இந்த பயன்பாட்டாளர்கள் நன்நீர் மீனவ கைத்தொழிலில் ஈடுவடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | உபகரணங்களை பிரருக்கு வழங்காது மீனவ கைத்தொழிலில் ஈடுபடுத்த வேண்டும். |

### 1.5.6 தலைப்பு 621 - வடமத்திய மாகாண விவசாயத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வடமத்திய மாகாண விவசாய அபிவிருத்தி முற்பணக் கணக்கு** | | |
| (அ) வடமத்திய மாகாண விவசாய அபிவிருத்தி முற்பணக் கணக்கு நடவடிக்கையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிற்காக பேணிச் செல்லப்படும் நடைமுறை கணக்கிற்குரியதாக 2021 திசெம்பர் 31 திகதி தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் கூட்டுத் தொகை ரூபா 595,537 ஆன இனங்காணப்படாத கிடைப்பனவுகளை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கெள்ளப்பட்டுள்ளது. | இனங்காணப்படாத கிடைப்பனவுகளை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) வடமத்திய மாகாண விவசாய அபிவிருத்தி முற்பணக் கணக்கு நடவடிக்கை ஒன்றில் பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்களின் மீள்ஏற்பாட்டிற்கு செலவாகும் தொகையை தீர்த்துக் கொள்ளக் கூடியவாறு வடமத்திய மாகாண சபையின் நிதி விதிகள் 377.1 பிரகாரம் மூலதன சொத்துக்களின் வருடாந்த பெறுமானத் தேய்வு "பொது வைப்பு கணக்கு – பெறுமானத் தேய்வு ஏற்பாட்டு நிதியத்திற்கு" செலவு வைப்பதற்காக மாகாண திறைசேரிக்கு அனுப்ப வேண்டும். எவ்வாறாயினும் விவசாய முற்பண கணக்கு நடவடிக்கையில் மூலதன சொத்துக்களிற்கு உரியதாக 2021 திசெம்பர் 31 திகதிக்கு பெறுமானத் தேய்வை கணக்கிட்டு மாகாண திறைசேரிக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 2021 ஆண்டு மற்றும் கடந்த ஆண்டுகளிற்கான செம்மையாக்கல் மற்றும் 2022 ஆண்டு முதல் எதிர் காலத்தில் உரிய முறையில் தேவையான நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | வடமத்திய மாகாண சபையின் நிதி விதிகள் 377.1 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.7 தலைப்பு 622 - வடமத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

-----------------------------------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **வடமத்திய மாகாண கால்நடை அபிவிருத்தி முற்பணக் கணக்கு** | | |
| (அ) | மீளாய்வாண்டில் திரப்பனே கால்நடை பண்ணைக்கு சொந்தமான கட்டிடங்கள், கால்நடை கொட்டில், வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றின் பெறுமதியை மதிப்பிட்டு, ஆதனங்கள் பொறிகள் உபகரண பதிவேட்டில் குறிப்பிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2022 ஆண்டில் சொத்துக்களின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கு வைக்க நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | அனைத்து சொத்துக்களும் ஆதனங்கள் பொறிகள் உபகரண பதிவேட்டில் குறிப்பிட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இன் ஏற்பாடுகள் பிரகாரம் விவசாய நிறுவனத்தினால் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை கணக்கீடு செய்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய பின்வரும் விடயங்கள் முற்பணக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | சுட்டிக்காட்டியுள்ளவாறு 2022 ஆண்டு முதல் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இன் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (i) | நிறுவனத்தின் அனைத்து உயிரியல் விஞ்ஞான சொத்து வகைகள் பற்றி விபரம். | | |
| (ii) | ஒவ்வொறு வகையினதும் உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் தொடர்பான அவற்றின் செயற்பாடுகளின் தன்மை பற்றிய விபரம். | | |
| (iii) | காலப் பகுதி நிறைவில் நிறுவனத்தின் ஒவ்வவொறு உயிரியல் விஞ்ஞான சொத்துத் தொகுதியினதும் பௌதீக அளவுகளின் நிதியல்லா அளவைகள் அல்லது மதிப்பீட்டு விபரங்கள் | | |

(iv) நிறுவனத்தினால் ஒவ்வொரு வகையினதும் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் சாதாரண பெறுமதியை உறுதிசெய்கையில் பயன்படுத்திய முறை மற்றும் முக்கிய எண்ணக்கருக்கள்.

### 1.5.8 தலைப்பு 631 - வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 செம்டம்பர் 02 திகதிய இலக்கம் 02-133/2013 கொண்ட சுகாதார அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் 01 பந்தி மற்றும் மருந்துகள் முகாமைத்துவ வழிகாட்டியின் 03 பந்தியின் 4(a) மற்றும் (b) பந்தி பிரகாரம் ஓராண்டினுள் 06 தடவைகள் நடாத்தப்பட வேண்டிய மருந்தக சிகிச்சைக் குழு கூட்டம் (Institutional Drug Therapeutic Committee) பொலன்னறுவ பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் 2019 ஆண்டிற்காக ஒரு சந்தர்ப்பத்திலும், 2021 ஆண்டிற்காக ஒரு சந்தர்ப்பத்திலும் நடாத்தியிருந்ததுடன், 2020 ஆண்டிற்காக இக் குழு கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் உரிய பிரகாரம் இக் குழுவை நடாத்த நடவடிக்கை எடுக்குமாறு கட்டளையிட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிற்கு குறிப்பிடப்பட்டுள்ளது. | மருந்தக சிகிச்சைக் குழு கூட்டம் (Institutional Drug Therapeutic Committee) 2013 செம்டம்பர் 02 திகதிய இலக்கம் 02-133/2013 கொண்ட சுகாதார அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் 01 பந்தி மற்றும் மருந்துகள் முகாமைத்துவ வழிகாட்டியின் 03 பந்தியின் 4(a) மற்றும் (b) பந்தி பிரகாரம் நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | பாவனையிலிருந்து அகற்றிய மருந்து இருப்பை அழிக்கும் வரை 04 ஆண்டுகளை விஞ்சிய காலமாக வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மருந்துகள் வழங்கும் பிரிவில் மருந்தக களஞ்சியத்தில் பாதுகாப்பின்றி குவிக்கப்பட்டிருந்ததுடன், அந்த மருந்து இருப்பு தொடர்பாக அவற்றின் பெயர், | களஞ்சியங்களில் இட வசதி போதாமை காரணமாக பாவனையிலிருந்து அகற்றிய மருந்து இருப்புக்களும் சாதாரண மருந்தக களஞ்சியத்திளேயே களஞ்சியப்படுத்தி | பவனையிலிருந்து அகற்றிய மருந்து இருப்புக்களை சாதாரண மருந்து இருப்புக்களுடன் ஒரே களஞ்சியத்தினுள் களஞ்சியப்படுத்தக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்தி திகதி, மருந்து களஞ்சியத்திற்கு கிடைத்த திகதி, காலாவதியான திகதி மற்றும் அளவுகள் போன்ற தகவல்களும் திணைக்களத்திடம் காணப்படவில்லை. அவ்வாறே காலாவதியான 75 வகை மருந்துகள் மற்றும் 83 சத்திர சிகிச்சை உபகரணங்கள் 2018 ஆண்டு முதல் அக் களஞ்சியத்தில், 2017 ஆண்டு முதல் காலாவதியாகி இருந்த 124 வகைகளிற்குரிய 294,813 அலகுகள் பொலன்னறுவ சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலும் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக களஞ்சியங்களிலும், மதிப்பிடப்படாத மற்றும் கோரப்பட்டிருக்காத போதும் 2020/2021 ஆண்டுகளில் கிடைத்திருந்த மருந்துகளில் காலாவதியாகி இருந்த 1684 மருந்து வகைகள் அநுராதபுர பிரதேச மருந்தக களஞ்சியத்திலும் காணப்பட்டன. | வைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (இ) | அநுராதபுர பிரதேச மருந்துகள் வழங்கும் பிரிவில் பௌதீக இருப்பு மீதிகள் வைத்திய வழங்கல் முகாமைத்துவ தரவுத் தொகுதியில் (MSMIS) மீதிகளுடன் ஒப்பிடுகையில் தொகுதி இருப்பு கணிப்பீடு (System Verification) 2018 திசெம்பர் 31 திகதியின் பின்னர் மேற்கொள்ளப்பட்டு இருக்காததுடன் வடமத்திய மாகாணத்தில் 22 பிரதேச வைத்திய சாலைகளில் வைத்திய வழங்கல் முகாமைத்துவ தரவுத் தொகுதி (MSMIS) இஸ்தாபிக்கப்பட்டு இருக்கவில்லை. | 22 பிரதேச வைத்திய சாலைகளில் வைத்திய வழங்கல் முகாமைத்துவ தரவுத் தொகுதிகளை (MSMIS) இஸ்தாபிக்குமாறு குறித்த பிரிவுகளிற்கு அறிவிக்க நடவடிக்கை எடுப்பதுடன் ஏனைய வைத்திய சாலைகளில் பௌதீக இருப்பு மீதிகள், தரவுத் தொகுதி மீதிகளுடன் இணக்கம் செய்ய தொகுதி இருப்பு கணிப்பீடு 2022 ஆண்டு முதல் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | தொகுதி இருப்பு கணிப்பீடு (System Verification) ஒவ்வொறு ஆண்டிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நாச்சாதூவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கான பொறியியல் மதிப்பீடு ரூபா 37,330,840 ஆனதுடன் முன்வைக்கப்பட்டிருந்த ஒரே விலைமனு ரூபா 43,038,725 ஆனது. அந்த விலைமனு, பொறியியல் மதிப்பீட்டை விட ரூபா 5,707,885 இனால் விஞ்சியிருந்த போதும் பொறியியல் மதிப்பீட்டிற்குரிய செயற்பாடுகளை செய்து கொள்ள ஒப்பந்ததாரரை உடன்படுத்திக்கொள்ள அல்லது மீண்டும் விலைமனு கோரல் ஏனும் மேற்கொள்ளாது மனுதாரரின் பெறுமதிக்கு 2021 ஒக்டோபர் 28 திகதி வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் உடன்பட்டு ரூபா 12,660,000 ஆன வேலை ஆரம்ப முற்பணத்தையும் செலுத்தியிருந்தது. நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்ட நிலத்தில் உரிமை தொடர்பான சட்ட மற்றும் நிர்வாகம் தொடர்பா போதிய கவனம் செலுத்தாது இருந்த காரணத்தால் பின்னர் ஏற்பட்ட பிரச்சினையொன்றின் அடிப்படையில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்காததுடன் உள்ளூராட்சி நிறுவனமொன்றினால் அங்கு நிலையான நிர்மாணமொன்றை மேற்கொண்டிருந்தது. எவ்வாறாயினும் கொடுப்பனவு செய்திருந்த ரூபா 12,660,000 முற்பணத்தை அறவிட்டிருக்கவில்லை. | முற்பணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதுடன் பொறுப்புவாய்ந்த அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை ஒன்றை மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | முற்பணத்தை அறவிட வேண்டியதுடன் பொறுப்புவாய்ந்த அலுவலர்களுக்கு எதிராக வரைவில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு சொந்தமான 124 நிறுவனங்களில், 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான காணி மற்றும் கட்டிடங்களின் 05 காணிகளில் மற்றும் 17 கட்டிடங்களின் பெறுமதிகள் மாத்திரம் நிலையான சொத்துக்கள் | 02 மாதங்களில் ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | அனைத்து சொத்துக்களும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட வேண்டும். |

|  |  |  |  |
|---|---|---|---|
|  | பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்தன. |  |  |
| (ஊ) | வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு சொந்தமான 293 அரச இல்லங்களில், 201 இல் அலுவலர்கள் குடியிறுப்பதுடன் இவற்றில் 27 அரச இல்லங்களிலிருந்து வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | அரச இல்லங்களில் குடியிறுக்கும் அனைத்து அலுவலர்களிடமிருந்தும் வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டும். |
| (எ) | பயன்பாட்டிலிருந்து அகற்றப்ட்டிருந்த பொலன்னறுவ சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு சொந்தமான 05 வாகனங்கள், புலஸ்திகம மற்றும் ஜயன்திபுர வைத்தியசாலை வளவில் பாதுகாப்பின்றி நிறுத்தப்பட்டிருந்ததுடன், இன்னும் 06 வாகனங்களை திருத்த வேண்டியிருந்ததால் ஒட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தன. | பெறுமதியை மதிப்பிட்டு 06 Micro வாகனங்களை முன்நடவடிக்கைகளுக்கு பிரதான செயலாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | எஞ்சிய வாகனங்களை திருத்தி பயன்படுத்த அல்லது அவ்வாறு செய்ய முடியாதெனில் ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | தபுத்தேகம மற்றும் கெபிதிகொள்ளேவ ஆகிய இரண்டு வைத்தியசாலைகளில் இரத்த மாற்று அலகை பொது மக்களிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும், 2020 திசெம்பர் 31 திகதி வரையும் முகாமைத்துவத்தின் பலவீனங்கள் காரணமாக ஆரம்பிக்க இயலாதிருந்தது. அதன் பிரகாரம் இந்த 02 வைத்தியசாலைகளிற்கு வழங்கியிருந்த 08 இரத்து மாற்று இயந்திரங்கள் உட்பட செலவிடப்பட்டிருந்த ரூபா 90.8 மில்லியனான தொகையிலிருந்து சிறுநீரக நோயாளர்களுக்கு எவ்வித சிகிச்சையும் கிடைத்திருக்காததுடன், அந்த கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் பயன்பாடின்றி காணப்பட்டன. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | சிறுநீரக நோயாளர்களுக்கு பயன்களை வழங்கும் நோக்கை அடைந்து கொள்ள வேண்டும். |
| (ஐ) | சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் ஏற்பாட்டின் மீது 2020 ஆண்டில் மேற்கொண்ட அநுராதபுர மாகாண மருத்துவ வழங்கல் பிரிவின் | காரணத்தை கண்டறிய விசாரணையொன்றை மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | உடன்படிக்கைக்கு இணங்க மாத்திரமே கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | களஞ்சிய கட்டிடத்தின் திருத்த வேலைகளுக்குரிய பொறியியல் மதிப்பீடு ரூபா 4,166,085 ஆனதுடன் ரூபா 3,339,057 ஆன குறைந்தபட்ச விலைமணு மீது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உடன்பாட்டுத் தொகை 18 சதவீதத்தால் அதாவது ரூபா 593,733 இனால் அதிகரித்து ரூபா 3,932,790 தொகை ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அது அடுத்த குறைந்த பட்ச விலைமணுவை ரூபா 478,219 இனால் அதிகரித்துச் செல்வதொன்றாக அவதானிக்கப்பட்டது. | | |
| (ஒ) | 14 விஷேட வைத்திய நிபுணர்கள் மற்றும் 42 ஏனைய வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட சுகாதார ஆளணியில் காணப்பட்ட 633 வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்திருக்கவிலலை. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | சுகாதார ஆளணியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.9 தலைப்பு 632 - வடமத்திய மாகாண ஆயர்வேத திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க நிதியத்தை பயன்படுத்தி அபிவிருத்தி செய்த தற்போது நடாத்திச் செல்லப்படும் 27 ஏக்கர் அளவான காலதிவுள்வெவ மூலிகைத் தோட்டம், 03 ஏக்கர் நதுன் செவன, தெளிஹிரியாவ மூலிகைத் தோட்டம் மற்றும் 02 ரூட் 12 பர்சஸ் பழுகஸ்வெவ மூலிகைத் தோட்டம் ஆகியவற்றின் உரிமையை இலங்கை மஹாவெலி அதிகாரசபையிடம் மற்றும் பழுகஸவெவ பிரதேச செயலாளரிடமிருந்து மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்கு சுவீகரித்துக் கொள்ள மீளாய்வாண்டிலும் இயலாதிருந்தன. | இந்த மூலிகைத் தோட்டங்கள் மஹாவெலி வலயங்களில் காணப்படுவதுடன் மஹாவெலி அதிகாரசபை அந்த காணிகளின் உரிமையை ஒப்படைக்க விருப்பமில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. | மாகாண ஆயுர்வேத திணைக்களத்தினால் அபிவிருத்தி செய்யும் மூலிகை தோட்டங்களின் உரிமையை திணைக்களத்திற்கு சுவீகரித்துக் கொள்ள வேண்டும். |

**1.5.10 தலைப்பு 640 - வடமத்திய மாகாண கூட்டுறவு, வியாபார மற்றும் உணவு, போக்குவரத்து, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 9.6 பந்தி பிரகாரம் அரசாங்க விடுமுறை தினமொன்றில் கடமை நிமித்தம் பிரயாணம் செய்தல், விடுமுறை தின படிகள் செலுத்தும் செயற்பாடிற்கான வேலை செய்தலாக கணக்கிடக் கூடாததுடன், அப் பிரயாணம் உண்மையாகவே கடமையொன்றை மேற்கொள்வதற்காகவே பயணித்த ஒன்ரெனில் அதற்காக பதில் விடுமுறையொன்றை மாத்திரம் பெற்றுக் கொள்ள முடியுமான போதும், மாகாண போக்குவரத்து, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள், கூட்டுறவு, வியாபார மற்றும் உணவு, மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு மற்றும் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் கள கடமைகளுக்காக அலுவலகத்திலிருந்து வெளிச் சென்றமைக்கு இரண்டு பதவிநிலை அலுவலர்களுக்கு 23 சந்தர்ப்பங்களில் ரூபா 368,267 ஆன விடுமுறை தின சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 9.6 பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மாகாண போக்குவரத்து, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள், கூட்டுறவு, வியாபார, உணவு, மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சிற்கு சொந்தமான ரூபா 30,500,000 பெறுமதியான 02 | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | 02 வாகனங்களையும் திருத்தி பயன்படுத்த அல்லது அவ்வாறு செய்ய முடியாதெனில் ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்கள் நீண்ட காலமாக உரிய திருத்தம் மற்றும் பராமரிப்பு இல்லாது பயன்பாட்டிற்கு எடுக்க முடியாது பழுதடைந்து காணப்பட்டன. | | வேண்டும். |
| (இ) | பிரதேச செயலகத்திற்கு பயன்பாட்டு கணக்குகள் மற்றும் அதற்குரியதாக மாகாண மோட்டார் வாகன திணைக்களத்தின் admin இனால் வழங்கப்படும் கடவுக்குறியீடு மாற்றப்படாது பிரதேச செயலகத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தமை, திணைக்களத்தின் மற்றும் பிரதேச செயலகங்களில் கருமபீடங்களிற்கு வழங்கியுள்ள பயன்பாட்டு கணக்குகளிற்குரிய கடவுக்குறியீடு திணைக்கள admin இனால் கோவையிடல், திணைக்களத்தில் மற்றும் பிரதேச செயலகங்களில் கருமபீடங்களில் கடமை புரியும் நபருக்கு Operator, Supervisor மற்றும் Admin ஆகிய 03 பயன்பாட்டு கணக்குகள் மற்றும் அதற்குரிய கடவுக்குறியீடு வழங்கப்பட்டுள்ளமை, அதிகாரத்துடன் கூடிய எழுத்துமூல அனுமதியின்றி தொகுதிக்கு பயன்பாட்டாளர்கள் உள்ளீடு செய்ய காணப்படும் இயலுமை, இணையத்தில் காணப்படும் உபுன்டு (UBUNTU) இயக்கத் தொகுதியை இஸ்தாபித்துக் கொண்டு வருமான அனுமதிப் பத்திரம் விநியோகிக்கும் தொகுதிக்கு பிரவேசிக்கும் இயலுமை காணப்படல் போன்ற தொகுதியின் மற்றும் நிறுவனத்தில் காணப்படும் தவறுகள் காரணமாக அனுமதியின்றி அவ் அலுவலகங்களில் ஏதேனும் அலுவலர் ஒருவருக்கு வடமத்திய மாகாண மோட்டார் வாகன திணைக்களத்தில் வருமான அனுமதிப் பத்திரம் | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தேவையான வழிகாட்டிகள் மற்றும் கட்டளைகளை விநியோகித்து குறைபாடுகளை சீராக்க நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | வருமான அனுமதிப் பத்திர வருமானத்தை மோசடி செய்வதனை தவிர்த்துக் கொள்ள திணைக்களத்தினால் கட்டுப்பாட்டு ஒழுங்குகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் அக் கட்டுப்பாட்டு ஒழுங்குகள் முறையாக செயற்படுவதாக பொறுப்பேற்க வேண்டும். |

விநியோகிக்கும் தொகுதிக்கு பிரவேசித்து மோசடியாக கடந்த ஆண்டின் வருமான அனுமதிப் பத்திரம், புகைச் சான்றிதழி மற்றும் காப்புறுதி சான்றிதழ் இல்லாது வருமான அனுமதிப் பத்திரம் விநியோகித்தல், விநியோகிக்கப்பட்ட வருமான அனுமதிப் பத்திரங்களின் தகவல்களை அழித்துவிடல், மாற்றுதல், நிலுவை வருமானத்தை அழித்துவிடல் போன்ற வற்றால் வாகன வருமான அனுமதிப் பத்திர வருமானத்தை மோசடி செய்யும் இயலுமை காணப்படுகின்றது. அவ்வாறே இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் காணப்பட்ட போதும் அம் மோசடிகளை மேற்கொண்டுள்ளது யாரால்? என கண்டறிய, இத் தொகுதியை வடமத்திய மாகாண மோடார் வாகன திணைக்களத்திற்கு விற்பனை செய்துள்ள இலங்கை தகவல்கள் தொலைதொடர்பு தொழிநுட்ப முகவர் நிறுவனத்திற்கும் முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5.11 தலைப்பு 641 - வடமத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுறவு சங்கங்களினால் அதன் அங்கத்தவர்களுக்கு/ ஊழியர்களுக்கு வழங்கியுள்ள கடனை மீள் அறவிடும் போது ஏற்படும் பிரச்சினையை தீர்த்தல் அதாவது தீர்மானிப்பு, 2009 இலக்கம் 05 கொண்ட வடமத்திய மாகாண கூட்டுறவு விஞ்ஞாபனத்தின் 58(2) பிரிவு பிரகாரம் கூட்டுறவு அபிவிருத்தி னையாளர்/பதிவாளரிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் 2021 திசெம்பர் 31 திகதியன்று அநுராதபுர | தீர்மானிப்பை முடிவுறுத்தாத பிரச்சினைகளின் எண்ணிக்கை 306 ஆனதுடன் விசாரிக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு உரிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 215,055 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. | அனைத்து தீர்ப்பு நடவடிக்கைகளையும் தாமதமின்றி முடிவுறுத்த வேண்டியதுடன் தீர்ப்புக்களை பூர்த்தி செய்துள்ள பிரச்சினைகளிற்காக கிடைத்துள்ள நீதிமன்ற தண்டப்பணத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மாவட்டத்தில் ஏற்பட்டிருந்த 1774 பிரச்சினைகளில் 306 இற்குரியதாக தீர்ப்புக்களை முடிவுறுத்தி இருக்கவில்லை. அவ்வாறே பிரச்சினை தீர்ப்பனவு கட்டணம் மற்றும் தீர்மானிப்பை பூர்த்தி செய்துள்ள பிரச்சினைகளுக்குரிய நீதிமன்ற தண்டப்பணம் கிடைப்பனவுகளிலிருந்து ரூபா 215,055 தொகைக்கு உரிய கூட்டுறவு சங்கங்களை இனங்காண முடியாதிருந்தது. | | உரிய கூட்டுறவு சங்கத்தை இனங்காண வேண்டும். |
| (ஆ) | 2009 இன் 05 இலக்க கூட்டுறவு சங்க விஞ்ஞாபனத்தின் 58(3) பிரிவு பிரகாரம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கமொன்று தொடர்பான தீர்ப்பனவு பிரச்சினையை தீர்ப்பதற்காக பதிவாளரிற்கு கிடைக்கும் மேன்முறையீடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், வடமத்திய மாகாண கூட்டுறவு ஆணையாளர்/ பதிவாளரிற்கு கிடைத்திருந்த 40 மேன்முறையீடுகள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. இந்த மேன்முறையீடுகளிற்காக மேன்முறையீட்டாளர்களினால் ரூபா 2,075,850 ஆன மேன்முறையீட்டு வைப்புக்களை மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திணைக்களத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | இவற்றில் 05 மேன்முறையீடுகளிற்கான நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | அனைத்து முறைப்பாடுகள் தொடர்பாக விரைவில் நடவடிக்கைகளை முடிவுறுத்த வேண்டும். |

**(இ) வடமத்திய மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்கள் உத்தேச திட்டம்**

---

| | | | |
|---|---|---|---|
| (i) | வடமத்திய மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்கள் உத்தேச திட்டத்திற்குரிய 2015, 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு | கூடிய விரைவில் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை உரிய திகதியில் கணக்கயாவிற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படாததுடன் அதன் காரணமாக கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்ய முடியாதிருந்தது. | | |
| (ii) | நிதியத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள தற்போது சேவையிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து மாதாந்தம் ரூபா 500 வீதமும், ஒவ்வொரு ஊழியர்களிற்காகவும் கூட்டுறவு சங்கத்தினால் ரூபா 500 வீதமும் வடமத்திய மாகாண சபையினால் வருடாந்தம் ரூபா 10 மில்லியன் வீதமும் கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்கள் உத்தேச திட்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன், வருடாந்தம் ஓய்வு பெற்ற 550 பேர்களுக்கு ஓய்வூதியமாக ரூபா 13 மில்லயனிற்கும் அதிகமான தொகையை செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2021 திசெம்பர் 31 திகதியன்று நிதியத்தின் மீதி ரூபா 13 மில்லயனிற்கு அன்மித்திருந்ததுடன் 2018 ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரையான காலப்பகுதியில் நலன்களை பெற உரிமை பெற்றுள்ள 34 அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 2,854,037 ஆன நிலுவை ஓய்வூதியத்தையும் நலன்களையும் மற்றும் 2011 ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரை ஓய்வுபெற்றிருந்த 07 பேர்களுக்கு ஒரே தடவையில் செலுத்த வேண்டிய ரூபா 312,602 ஆன ஓய்வூதிய நலன்களை செலுத்தியிருக்கவில்லை. அதன் பிரகாரம் இந் நிதியத்திலிருந்து நலன்கள் செலுத்துவது உறுதியான நிலையில் இல்லையென அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இப் பிரச்சினையை தீர்த்துக் கொள்ள முடியுமான வகையில் திருத்தங்களை மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | அனைத்து அங்கத்தவர்களுக்கும் நலன்கள் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.12 தலைப்பு 642 - மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தில் விஸ்கம் பியச கட்டிடத்தில் நடாத்திச் செல்லப்படும் 42 காட்சிப்படுத்தல் கடையறைகளிலிருந்து 2016 ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 1,722,075 ஆன வாடகை நிலுவையாக காணப்பட்டதுடன் இக் கடையறை வாடகையை அறவிட போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டரீதியாக வாடகை அறவிட நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | உரிய முறைப்படி வாடகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மாகாண நிதிவிதி 54.6 பிரகாரம் வாகன விபத்தொன்று தொடர்பாக விபத்து ஏற்பட்டு 03 மாதங்களிற்குள் பூரண அறிக்கையொன்றை தயாரிக்க வேண்டிய போதும், 2021 மார்ச் 17 திகதி விபத்துள்ளாகியிருந்த மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான கெப் வண்டியொன்று தொடர்பாக கணக்காய்வு திகதியான 2022 மே 30 திகதியளவிலும், பூரண அறிக்கையை தயாரித்திருக்கவில்லை. இக் கெப் வண்டிக்காக பூரண காப்புறுதி காப்பொன்றை பெற்றிருந்த போதும் வாகனத்தின் உருகி (பியுஸ்) உரிய நியமத்துடனல்லாது தொடர்புபடுத்தி உள்ளதால் ஆரம்ப அறிக்கை பிரகாரமான ரூபா 109,500 ஆன நட்டத்திற்கு காப்புறுதி இழப்பீட்டை பெற முடியாதிருந்தது. | ஆரம்ப அறிக்கை பிரகாரம் நட்டம் ரூபா 109,500 தொகை என குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் காப்புறுதி இழப்பீட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்காத அலுவலர்களுக்கு எதிராக செயற்பாடு எடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(இ) வடமத்திய மாகாண தச்சுப் பாடசாலை நடவடிக்கை முற்பணக் கணக்கு**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று தச்சுப் பாடசாலை நடவடிக்கை முற்பணக் கணக்கின் உற்பத்தி, கடன் அடிப்படையில் விற்பனை செய்வதன் காரணமாக 02 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலுவையாக நிலவிய கடன்படுனர் மீதி ரூபா 1,903,236 ஆனதுடன், அவற்றில் 04 ஆண்டுகளை விஞ்சிய கடன் மீதி ரூபா 1,041,261 ஆனது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | அனைத்து கடன்களையும் அறவிட வேண்டும். |

**(ஈ) வடமத்திய மாகாண நெசவுக் கைத்தொழில் நடவடிக்கை முற்பணக் கணக்கு**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு நெசவுக் கைத்தொழில் நடவடிக்கை முற்பணக் கணக்கு விற்பனை ரூபா 13,856,294 ஆனதுடன் 2021 திசெம்பர் 31 திகதியன்று கை இயந்திர புடவைகளின் கிரயத்திற்கு கணக்கிடப்பட்ட பூர்த்தியான இருப்பு ரூபா 40,057,252 ஆனது. இறுதி இருப்பு விற்பனையின் 289 சதவீதமானதுடன் அதனை விற்பனையாக மாற்ற 03 ஆண்டுகளிற்கு அன்மித்த காலமொன்று செல்வதால், கை இயந்திர புடவை பூர்த்தியான இருப்பின் தேறிய மாற்றப்படாத பெறுமதி மிகக் குறைந்த பெறுமதியாக இருக்க முடியுமென அவதானிக்கப்பட்டது. | பூர்த்தியடைந்த இருப்பு உற்பத்தி கிரயத்திற்கு கணிக்கப்பட்டுள்ளது. அதனை எதிர்காலத்தில் தேறிய மாற்றப்பட்ட பெறுமானத்திற்கு கணக்கிட நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | கிரயம் அல்லது தேறிய மாற்றப்பட்ட பெறுமானத்தின் குறைத்த பெறுமானத்திற்கு இருப்பு கணக்கிடப்பட வேண்டும். |

## 1.5.13 தலைப்பு 651 - வடமத்திய மாகாண நீர்பாசனத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வடமத்திய மாகாண நீர்பாசனத் திணைக்களம் தரநிர்னய கட்டுபாட்டு முற்பணக் கணக்கு** | | |
| ஒவ்வொறு நிலையான சொத்து விடயத்திற்கும் உரியதாக அதன் | ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் | மாகாண நிதி விதி 368.2 பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | கிரயத்தை அறிமுகப்படுத்தல், சுவீகரித்த திகதி, வருடாந்த பெறுமானத் தேய்வு விகிதம் மற்றும் அமைவிடம் போன்ற விரிவான விபரங்களை உள்ளடக்கி மாகாண நிதி விதி 368.2 பிரகாரம் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிற்கு உரிய நிலையான சொத்து பதிவேட்டை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலையான சொத்து பதிவேட்டை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.14 தலைப்பு 653 - மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **வடமத்திய மாகாண கிராம அபிவிருத்தி நிதியக் கணக்கு** | | |
| (i) | வடமத்திய மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கத்தை அடைந்து கொள்ள வடமத்திய மாகாண சபையின் 2011 இலக்கம் 03 கொண்ட கிராம அபிவிருத்தி விஞ்ஞாபனத்தின் 26(1) பிரிவு பிரகாரம் கிராம அபிவிருத்தி நிதியத்தை உருவாக்கியுள்ள போதும் 2021 திசெம்பர் 31 திகதி நிதிய வங்கிக் கணக்கில் இருந்த ரூபா 1,581,477 தொகையை அதன் குறிக்கோள் மற்றும் நோக்கத்தை அடைந்து கொள்ள பயன்படுத்தி இருக்கவில்லை. | நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கத்தை அடைந்து கொள்ளவதற்காக நிதியம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | கிராம அபிவிருத்தி விஞ்ஞாபனத்தின் 27 பிரிவு பிரகாரம் கிராம அபிவிருத்தி விடயப் பொறுப்பு அமைச்சரினால் தயாரிக்க முடியுமான விதிகள் மூலம் நிதியத்தை கட்டுப்படுத்த வேண்டிய போதும் விஞ்ஞாபனத்தை அங்கீகரித்து 10 ஆண்டுகள் கடந்திருந்த போதும் நிதியத்தின் விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆளுனரிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிதியத்திற்கான விதிகளை தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாகாண சபை கலைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் ஒன்றில் அமைச்சர்களின் அதிகாரங்கள் ஆளுனருக்கு பொறுப்புச் சாட்டப்படுகின்ற போதும் ஆளுனரினாலும் அந்த விதிகளை தயாரித்திருக்காத காரணத்தால் மீளாய்வாண்டில் எந்தவித கொடுக்கல் வாங்கல்களையும் செய்திருக்கவில்லை. | | |

## 1.5.15 தலைப்பு 660 - வடமத்திய மாகாண பிரதம செயலகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமத்திய மாகாண பிரதான செயலாளர் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தராக செயற்படும் வருமான குறியீடு 09 ஆனதுடன் அவற்றிற்குரிய அவதானிப்புக்கள் பின்வருமாறு. | | |
| (i) | 02 வருமான குறியீடுகளிற்காக மதிப்பிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 110,000,000 ஆன போதும் உள்ளவாறான வருமானம் ரூபா 146,972,812 ஆனது. அதன் பிரகாரம் இந்த 02 வருமானக் குறியீடுகளிற்குரியதாக தயாரிக்கப்பட்டிருந்த குறைமதிப்பீட்டு பெறுமதி ரூபா 36,972,812 ஆனதுடன் அது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 34 சதவீதமானது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமனத்திற்கு கிட்டியதாக இருக்க வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டில் 06 வருமான குறியீடுகளிற்குரியதாக மதிப்பிடப்பட்டு இருந்த வருமானம் ரூபா 939,250,000 ஆன போதும் உள்ளவாறான வருமானம் ரூபா 692,373,238 ஆனது. அதன் பிரகாரம் இந்த 06 வருமானக் குறியீடுகளிற்குரியதாக தயாரிக்கப்பட்டிருந்த மிகை மதிப்பீட்டு | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமனத்திற்கு கிட்டியதாக இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி ரூபா 246,876,762 ஆனதுடன் அது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 26 சதவீதமானது. | | |
| (iii) | மீளாய்வாண்டில் வருமானக் குறியீடு 1002.12.00 இன் கீழான தேசத்தை கட்டியெழுப்பும் வரிக்காக வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருக்காத போதும் ஆண்டின் உள்ளவாறான வருமானம் ரூபா 9,521,752 ஆக இருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | அனைத்து வருமானங்களிற்கும் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.5.16 தலைப்பு 661 - வடமத்திய மாகாண திறைசேரி

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு வடமத்திய மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 10 பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 543,403,854 ஆனதுடன் அவற்றில் 02 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 43,375,481 ஆனது. | ஹிங்குரங்கொட பிரதேச செயலகத்தில் ரூபா 3,180,031 தொகை நொச்சியாகம பிரதேச செயலகத்தில் ரூபா 6,330 தொகை மற்றும் தமன்கடுவ பிரதேச செயலகத்தில் ரூபா 9,810 தொகையை தீர்க்க நடவக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | 02 ஆண்டு காலத்தை விஞ்சியுள்ள வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 10 பிரகாரம் வைப்புக் கணக்கின் கீழ் மாகாண திறைசேரிக்குரியதாக காட்டியுள்ள ரூபா 62,809,930 மீதியினுள் 13 பிரதேச செயலகங்களிற்குரிய ரூபா 62,191,229 ஆன வைப்பு மீதிகளும் உள்ளடங்கியிருந்தன. அவற்றில் 07 பிரதேச செயலகங்களிற்குரிய ரூபா 29,303,471 ஆன வைப்பு மீதிகள் 02 ஆண்டு காலத்தை விஞ்சியதாக இருந்தது. | பிரதான அமைச்சின் ரூபா 129,791,453 ஆன வைப்புக்கள் மற்றும் பிரதான செயலகத்தின் ரூபா 13,358,410 ஆன வைப்புக்கள் வேலைகள் பூர்த்தி அடையாத ஒப்பந்தங்களிற்குரிய நிறுத்தற் பணமாவதுடன் மாகாண விவசாய திணைக்களத்திற்குரிய ரூபா 269,341 ஆன தொகை மற்றும் மாகாண கல்வித் திணைக்களத்திற்குரிய ரூபா 788,031 ஆன தொகையை அரச வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | 07 பிரதேச செயலகங்களிற்குரிய 02 ஆண்டு காலத்தை விஞ்சியுள்ள வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் அமைச்சு/ திணைக்களம், வெளிநாட்டு கருத்திட்டம், தேசிய வரவு செலவுத் திணைக்களம் போன்ற மூலங்கிளிலிருந்து வடமத்திய மாகாண சபைக்கு ரூபா 1,595,033,325 ஆன கட்டுநிதி கிடைத்திருந்த போதும் 07 மூலங்களிலிருந்து கிடைத்துள்ள ரூபா 422,111,609 ஆன கட்டுநிதி எஞ்சியிருந்ததுடன் அம் மீதியானது கிடைத்திருந்த மொத்த கட்டுநிதியின் 06 சதவீதம் முதல் 100 சதவீத வீச்சளவிலானது. | கட்டுநிதி வழங்கும் நிறுவனங்களினாளே அவற்றை திட்டமிடுவதுடன் செயற்படுத்துவதற்கு மாத்திரம் மாகாண சபைக்கு நிதி விடுவிக்கப்படுகின்றது. செயற்படுத்திய கருத்திட்டத்திற்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | கிடைக்கும் அனைத்து கட்டுநிதிகளையும் பயன்படுத்த வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் காலநிலை விழிப்பு கருத்திட்டம், சிறிய அளவிலான விவசாய பங்கேட்பாளர் நிகழ்ச்சித் திட்டம் (SAPP), சௌபாக்கியா விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் நீர்பாசன சௌபாக்கியா எனும் 04 கருத்திட்டங்கிற்குரியதாக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 1,525,549,163 ஆன போதும் செயற்படுத்தலின் பலவீனமாக முன்னேற்றம் காரணமாக ஆண்டினுள் கிடைத்துள்ள மொத்த தொகை ரூபா 278,100,287 ஆனது. அது மதிப்பீடு செய்த தொகையின் 18 சதவீதமானது. | குறித்த கருத்திட்டங்களின் கோரிக்கை பிரகாரம் ரூபா 1,525,549,163 ஆன குறைநிரப்பு ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்ட போதும் கருத்திட்ட செயற்பாடுகளின் முன்னேற்ற பிரகாரம் கருத்திட்ட முகாமைத்துவ அலுவலகத்தினால் வழங்கியுள்ள தொகை ரூபா 278,100,287 ஆகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | மதிப்பிடப்பட்ட பிரகாரம் அனைத்து கட்டுநிதிகளையும் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைந்து கொள்ள வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் மத்திய அரசாங்க 02 அமைச்சுக்களிலிருந்து கிடைத்திருந்த ரூபா 273,756,124 ஆன கட்டுநிதியிலிருந்து திசெம்பர் 31 திகதியன்று எஞ்சிய ரூபா 66,192,651 தொகை திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. திருப்பி அனுப்பப்பட்டிருந்த தொகை கிடைத்திருந்த கட்டுநிதியின் 24 சதவீதமாக இருந்தது. | கட்டுநிதி வழங்கும் நிறுவனத்தினாளேயே அவற்றை திட்டமிட்டு செயற்படுத்துவதற்காக மாத்திரம் மாகாண சபைக்கு நிதி விடுவிக்கப்படுவதுடன் செயற்படுத்திய கருத்திட்டத்திற்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | கிடைக்கும் அனைத்து கட்டுநிதிகளையும் பயன்படுத்த வேண்டும். |

**(ஊ) வடமத்திய மாகாண அவசர சந்தர்ப்ப நிதியம்**

| | | |
|---|---|---|
| வடமத்திய மாகாணத்தின் எதிர்பாரா செலவுகளை மேற்கொள்ளும் நோக்கில் 1989 இலக்கம் 02 கொண்ட அவரச சந்தர்ப்ப நிதிய விஞ்ஞாபனம் 02(1) பிரிவு பிரகாரம் அவசர சந்தர்ப நிதியம் உருவாக்கப்பட்ட போதும் நிதியத்தை உருவாக்கிய திகதி முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரையான காலத்தினுள் வடமத்திய மாகாணத்தில் ஏற்பட்ட அவசர சந்தர்ப்பங்களின் போது இந்த நிதியத்திலிருந்து முற்பணம் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2021 திசெம்பர் 31 திகதியன்று இந் நிதியத்தின் மீதி ரூபா 30,131,572 ஆக இருந்ததாக அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | நிதியத்தின் எல்லையை மீறி நிதி திரட்ட அதிகாரம் இல்லாததால் எல்லையை மீறி நிதி திரட்டல் மேற்கொள்ளக் கூடாது. |

**1.5.17 தலைப்பு 662 - வடமத்திய மாகாண திட்டமிடல் மற்றும் செயற்பாட்டுத் திணைக்களம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ரூபா 27,660,000 ஆன நிதி பங்களிப்புடன் வடமத்திய மாகாணத்திற்காக 2018 ஆண்டு முதல் செயற்படுத்த பத்தாண்டு நிலைபேறான கூட்டிணைந்த அபிவிருத்தித் திட்டமொன்றை தயாரிப்பதற்காக ரூபா 27,606,176 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | நிலைபேறான கூட்டிணைந்த அபிவிருத்தித் திட்டத்தை தயாரிக்கும் போது வடமத்திய மாகாண பொருளாதார, சமுதாய மற்றும் சுற்றாடல் அபிவிருத்தியின் போது ஒத்துழைப்புடன் செயற்பட வடமத்திய மாகாணத்தின் பிரதான செயலாளர் மற்றும் இலங்கை ரஜரட பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டிருந்த போதும் அவ் ஒப்பந்தத்திற்கு மாற்றமாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடனும் ஒப்பந்தம் செய்து அவர்களின் சேவையை மற்றும் பல்கலைக்கழகத்தின் பௌதீக வளங்களை பயன்படுத்துவதற்காக அவ் விரிவுரையாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | நிலைபேறான கூட்டிணைந்த அபிவிருத்தித் திட்டத்தை தயாரிக்கும் போது முக்கியமாக பயன்படுத்தியுள்ள தரவுகளை பெற்றுக் கொண்டிருந்த, வடமத்திய மாகாண சபையினாளேயே தயாரித்து ‘‘கிராமம்’’ எனும் சஞ்சிகையை தயாரிக்கும் நோக்கம், அதனை தயாரிக்க தொடர்புபட்ட நபர்கள் மற்றும் அதற்காக செலவான தொகை பற்றிய தகவல்களை வழங்க வடமத்திய மாகாண சபைக்கு இயலாதிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | சஞ்சிகையை தயாரிக்கும் நோக்கம், அதனை தயாரிக்க தொடர்புபட்ட நபர்கள் மற்றும் அதற்காக செலவான தொகை பற்றிய தகவல்களை வழங்க வேண்டும். |
| (iii) | 2018 ஆண்டு முதல் செயற்படுத்த இருந்த பந்தாண்டு நிலைபேறான கூட்டிணைந்த திட்டத்தை தயாரிப்பதற்காக ரூபா 27,606,176 ஆன தொகை செலவிடப்பட்ட போதும் 2022 ஒக்டோபர் 17 திகதியளவிலும் அந்த திட்டத்தை தயாரித்து இருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிலைபேறான கூட்டிணைந்த அபிவிருத்தி நோக்கத்தை அடைந்து கொள்ள இத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். |

## 1.5.18 தலைப்பு 663 - வடமத்திய மாகாண பொறியியல் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வடமத்திய மாகாண பொறியியல் திணைக்களத்தின் தர கட்டுப்பாட்டு முற்பணக் கணக்கு** | | |
| மீளாய்வாண்டு தர கட்டுப்பாட்டு முற்பண செயற்பாட்டிற்குரியதாக எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தி இருக்காததுடன், கடந்த ஆண்டிலும் உள்ளக கணக்காய்வொன்றை செயற்படுத்தியிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | முற்பணக் கணக்கு செயற்பாட்டிற்குரிய கொடுக்கல் வாங்கல்களை உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்த வேண்டும். |

## 1.5.19 தலைப்பு 665 - வடமத்திய மாகாண இறைவரித் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமத்திய மாகாண இறைவரி திணைக்களத்திற்காக III அல்லது II தர வருமான மதிப்பீட்டாளர்/ சிரேஷ்ட வருமான மதிப்பீட்டாளர் 11 பதவிகள் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயத்தினால் அங்கீகரித்திருந்த போதும் 2016 சனவரி 01 திகதி முதல் செயற்படும் வடமத்திய மாகாண வருமான சேவையின் அலுவலர்களை ஆட்சேர்க்கும் மற்றும் தரம் உயர்த்தும் திட்டத்தில் வருமான மதிப்பீட்டாளர்/ சிரேஷ்ட வருமான மதிப்பீட்டாளர் II அல்லது I என குறிப்பிடப்பட்டிருந்தன. அந்த தவறை ஆட்சேர்ப்பு மற்றும் தரம் உயர்த்தும் திட்டதிதை அடிப்படையாகக் கொண்டு 04 சிரேஷ்ட வருமான மதிப்பீட்டாளர்கள் I தரத்திற்கு தரம் உயர்த்தப்பட்டிருந்ததுடன் அவ் அலுவலர்களுக்கு ரூபா 2,639,652 | தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் செயற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயத்தினால் அங்கீகரித்துள்ள பதவிப் பெயர்கள் மற்றும் தரத்தை மாத்திரம் ஆட்சேர்க்கும் மற்றும் தரம் உயர்த்தும் திட்டத்திற்கு உட்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை சம்பளமும் படிகளும் மற்றும் ஊக்குவிப்பு படிகளாக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | வடமத்திய மாகாண வருமான ஆணையாளர் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் எனும் வகையில் செயற்படும் 06 குறியீடுகளிற்கு உரியதாக மதிப்பிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 87,500,000 ஆன போதும் உள்ளவாறான வருமானம் ரூபா 61,662,545 ஆனது. அதன் பிரகாரம் மிகை மதிப்பீட்டு பெறுமதி ரூபா 25,837,455 ஆனதுடன் அது மதிப்பீட்டு வருமானத்தின் 30 சதவீதமானது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | முடியுமான வரை யதார்தமாக மற்றும் சரியாக மதிப்பீடுகளை தயாரிக்க வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.20 வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளிற்கு 2005 மற்றும் 2011 ஆண்டுகளில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த இரண்டு அலுவலர்களினால் ஆட்சேர்க்கும் சந்தர்ப்பத்தில் சமர்பித்த கல்விச் சான்றிதழ்கள் போலியானவை என உறுதியாகியிருக்கையில் அத் தவறு பற்றி ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக சம்பளம் மற்றும் படிகளாக ஆட்சேரத்த திகதி முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரை அவ் இரண்டு அலுவலர்களிற்கும் கூட்டுத் தொகை ரூபா 12,050,063 தொகை செலுத்தி அவர்களை தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர். | ஏற்றுக் கொள்கிறேன். | ஆட்சேர்க்கும் சந்தர்ப்பத்தில் சமர்பித்த கல்விச் சான்றிதழ்கள் போலியானவை என உறுதியாகிய பின்னர் குறித்த அலுவலளர்களை சேவையிலிருந்து அகற்ற வேண்டும். |
| (ஆ) | வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு 2004 ஆகஸ்ட் 01 திகதி முதல் அமுலாகும் வகையில் | ஏற்றுக் கொள்கிறேன். | அதிகார சபையின் சேவைக்கு ஆட்சேர்க்கப்படும் அலுவலர்களை |

| | | | |
|---|---|---|---|
| | ஆட்சேர்க்கப்பட்டிருந்த அலுவலர் ஒருவர் அத்திகதி முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரையான காலத்தினுள் பல அமைச்சுகளிற்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் சம்பளம் மற்றும் படிகளாக அதிகார சபையினால் அவரிற்கு செலுத்தியிருந்து ரூபா 8,216,229 ஆன தொகையை அவ் அலுவலர் இணைக்கப்பட்டு சேவையாற்றிய அமைச்சுக்களிலிருந்து மீள் நிரப்பிக் கொண்டிருக்கவில்லை. அவ்வாறே மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களுக்கு செலுத்தப்படும் வீதி அபிவிருத்தி அதிகார படிகளாக ரூபா 1,001,012 தொகையையும் அதிகாரசபையிற்கு வெளியில் சேவையாற்றிய காலத்திற்காக அவ் அலுவலருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்த படிகளிற்குரியதாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 150,151 ஆன தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | | அதிகார சபையில் சேவைக்கு ஈடுபடுத்த வேண்டியமை மற்றும் ஏனைய நிறுவனங்களிற்கு இணைக்கப்படுவதாயின் அந்த நிறுவனத்திலிருந்து அலுவலரிற்குரிய சம்பளம் மற்றும் படிகளை மீள் நிரப்பிக் கொள்ள வேண்டும். |
| (இ) | 2018 ஜுலை 18 திகதி இலக்கம் 03/2018 கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன்கூட்டிய அங்கீகாரமின்றி ஆளணியை ஆட்சேர்ப்பதை தவிர்க்க வேண்டியதுடன் அவ் ஆலோசனைகளுக்கு மாற்றமாக செயற்படும் அதிகாரம் பிரதம செயலாளர், நிறுவன தலைவர் மற்றும் நிதிப் பிரிவு தலைவரினால் ஏற்க வேண்டும். அவ்வாறாயினும் அவ் ஆலோசனைகளுக்கு மாற்றமாக வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் திட்டமிடல் கலைஞர், தரவு தயாரிப்பாளர், தொழிலாளர் மேற்பார்வை ஆகிய 03 பதவிகளிற்கும் அங்கீகார ஆளணி எண்ணிக்கையை விஞ்சி 2009 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை கால எல்லையில் 06 அலுவலர்களை ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அந்த 06 அலுவலர்களுக்கும் சம்பளம் மற்றும் | ஏற்றுக் கொள்கிறேன். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன்கூட்டிய அங்கீகாரமின்றி ஆளணியை ஆட்சேர்க்கக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | படிகளாக ஆட்சேர்ப்பு திகதி முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 18,356,162 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | காலம் கடந்த ரூபா 2,114,525 ஆன 22 ஒப்பந்த நிறுத்தப் பணம் மற்றும் டெண்டர் வைப்புக்கள் தொடர்பாக நி.பி. 570 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆண்டில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 570 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2019 ஆண்டில் பூர்த்தியாகியுள்ள பிபிதெமு பொலன்னறுவ நிகழ்ச்சித் திட்டத்திற்கு அதிகார சபினால் 2019 ஆண்டில் வழங்கிய மதியுரை சேவைகளிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 35,944,342 தொகையை மீளாய்வாண்டு இறுதியிலும் பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து அறவிட அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய வருமானத்தை உரிய காலத்தினுள் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | அதிகார சபையின் சேவையிலிருந்து விழகிச் சென்றுள்ள 03 அலுவலர்களிற்காக கடந்த ஆண்டுகளில் ஒதுக்கி இருந்த கூட்டுத் தொகை ரூபா 1,226,803 ஆன பணிக்கொடை ஒதுக்கீட்டை மீளாய்வாண்டினுள்ளும் அலுவலருக்கு செலுத்தாது அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | சேவையிலிருந்து விழகியுள்ள அலுவலர்களுக்கு பணிக்கொடைத் தொகையை உரியவாறு தீர்க்க வேண்டும். |

## 1.5.21 வடமத்திய மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமத்திய மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபைக்கு சொந்தமான கெகிராவ பேரூந்து தரிப்பிட 12 கடையறைகளை 2002 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை காலத்தினுள் புதிய | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | பெறுமதியை மதிப்பிட்டு குத்தகை வாடகையை திருத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பிடல் அல்லது வரி திருத்தம் செய்யப்படாது அவ்வப் போது ரூபா 2,000 ஆன மாதாந்த வாடகைக்கு வியாபாரிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு கெகிராவ பிரதேச சபைக்கு சொந்தமான அந்த கடையறைகள் அமைந்துள்ள காணியின் உரிமையை, அதிகாரசபைக்கு சுவீகரிக்க 2021 ஆண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | கெகிராவ பேருந்து தரிப்பிடத்தில் அமைந்துள்ள 65 கடையறைகளிற்காக 2021 ஆண்டு திசெம்பர் 31 திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 3,523,009 ஆன வாடகையை அறவிட தேவையான நடவடிக்கை எடுத்திருக்காததுடன் முதல் குத்தகைதாரரினால் 06 கடையறைகளை, வேறு நபர்களுக்கு விற்பனை செய்தல் அல்லது குத்தகைக்கு வழங்கல் மேற்கொண்டுள்ள போதும் கடையறைகளை வாடகைக்கு வழங்கும் போது ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருக்காத காரணத்தால் விறபனை அல்லது உப குத்தகை வழங்கிய நபர்களுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கை எடுக்க அதிகாரசபையினால் இயலாதிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | பெற வேண்டிய வாடகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அதிகாரசபையினால் 14 பேருந்து தரிப்பிடங்களில் பல நிர்மாணங்களை மேற்கொண்டு அவற்றை பராமரித்த போதும் அக் காணிகளின் உரிமையை கெகிராவ பிரதேச சபையிடமிருந்து அதிகாரசபைக்கு சுவீகரித்துக் கொள்ள 2021 ஆண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இக் காணிகள் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு சொந்தமானதால் அவர்களின் ஒருமைப்பாட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்த போதும் அந்த ஒருமைப்பாடு கிடைக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. | விஞ்ஞாபனம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஈ) | 2013 இன் 03 இலக்க பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபையின் விஞ்ஞாபனத்தின் 6(2)1 பிரகாரம் அதிகாரசபையினால் முச்சக்கர வண்டி சேவைகள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முச்சக்கர வண்டி பதிவுசெய்தல், சாரதிகளை பதிவுசெய்தல் மற்றும் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் போன்ற 13 முக்கிய செயற்பாடுகளை செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | விஞ்ஞாபனம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.25 வடமத்திய மாகாண முன்பள்ளி சிறுவர் கல்வி அபிவிருத்தி அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்பள்ளி சிறுவர் கல்வி அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்பார்வை செய்யப்படும் பாலர் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு 2014 ஒக்டோபர் மாதத்திற்குரியதாக செலுத்த வேண்டி இருந்த ரூபா 900,000 ஆன ஆசிரியர் கொடுப்பனவை மற்றும் அதிகாரசபையிடம் காணப்பட்ட ரூபா 286,408 பெறுமதியான கணனிகள், ஒலிபெருக்கி இயந்திரம் மற்றும் ஏனைய உபகரணங்கள், 2013 நவம்பர் 14 திகதி முதல் 2015 மார்ச் 14 திகதி வரையான காலத்தினுள் அதிகாரசபையில் கடமையாற்றிய முகாமைத்துவ பணிப்பாளரினால் மோசடியாக எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதும் அவரிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதனை 2022 ஆண்டு வரை தாமதித்திருந்தது. | வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க தாமதித்தது தொடர்பாக விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டியதுடன் சட்ட நடவடிக்கையை துரிதப்படுத்தி குற்றவாளிகளிற்கு தண்டனை வழங்க வேண்டும். |
| (ஆ) | உரிய காலத்தில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தாததால் ரூபா 412,749 ஆன மிகை அறவீடு விதிக்கப்பட்டிருந்த போதும் அதனை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த மற்றும் செலுத்த, தாமதத்திற்கு பொறுப்பான | மிகை அறவீட்டை பொறுப்புவாய்ந்த அலுவலரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | மிகை அறவீட்டை பொறுப்புவாய்ந்த அலுவலரிடமிருந்து அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலரிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | வடமத்திய மாகாண முன்பள்ளி சிறுவர் கல்வி அபிவிருத்தி நிதியத்தில் ரூபா 5,967,434 தொகையொன்று நீண்ட காலமாக நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டு இருந்ததுடன் அத் தொகையை பயன்படுத்தி அந் நிதியத்தை உருவாக்கியதனால் அடைந்து கொள்ள எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.26 வடமத்திய மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண முகவராண்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரையான காலத்திற்குரியதாக அறவிட வேண்டியதாக காணப்பட்ட அச்சக வருமானம் ரூபா 7,189,412 தொகை, இயந்திர வாடகை வருமானம் ரூபா 5,784,063 தொகை, பாதுகாப்பு பிரிவு வருமானம் ரூபா 6,277,612 தொகை, வாகன பழுதுபார்த்தல் பிரிவு வருமானம் ரூபா 10,314,119 தொகை, வாகன சேவையிடும் வருமானம் ரூபா 3,664,700 தொகை மற்றும் டயர் சில்லு சேவை மத்திய நிலைய வருமானம் ரூபா 1,793,973 தொகை அறவிடப்படாத காணப்பட்டதுடன் அவற்றில் முறையே 87 சதவீதமான ரூபா 6,228,275 தொகை, 21 சதவீதமான ரூபா 1,190,485 தொகை, 56 சதவீதமான ரூபா 3,488,463 தொகை, 15 சதவீதமான ரூபா 1,542,071 தொகை, 17 சதவீதமான ரூபா 605,162 தொகை மற்றும் 37 சதவீதமான ரூபா 671,005 தொகைகளும் அறவிடப்படாது நிலவிய காலம் 02 முதல் 06 வருடங்கள் வரையான வீச்சளவிலானது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | அனைத்து வருமானங்களையும் உரிய காலத்தினுள் அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 13 ஆண்டுகளிற்கு அதிக காலமாக செலுத்த வேண்டியதாக நிலவும் கூட்டுத் தொகை ரூபா 16,011,120 ஆன பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் ரூபா 8,966,846 ஆன பண்டங்கள் மற்றும் சேவைகளின் மீதான வரி உள்நாட்டு இறைவரித் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் கலந்துரையாடி தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | அனைத்து வருமானங்களையும் உரிய காலத்தினுள் அறவிட வேண்டும். |
| (இ) | 2015 ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரையான காலத்திற்குரியதான கூட்டுத் தொகை ரூபா 9,506,813 ஆன செலுத்த வேண்டிய அச்சக செலவு, சில்லு டயர் சேவை மத்திய நிலைய செலவு மற்றும் செலுத்த வேண்டிய உதிரிப்பாக செலவுகள் காணப்பட்டதுடன் அவற்றிலிருந்து கூட்டுத் தொகை ரூபா 5,258,106 தீர்க்கப்படாது இருந்த காலம் 02 முதல் 06 ஆண்டுகள் வரையான வீச்சளவிலானது. | விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | அனைத்து செலுத்த வேண்டிய செலவுகளையும் தீர்க்க வேண்டும். |

## 1.5.27 வடமத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடன் செலுத்துவதனை புறக்கணிக்கும் நபர்களுக்கு எதிராக எடுக்க வேண்டிய செயற்பாடுகளை கடன் உடன்படிக்கையிற்கு உட்படுத்தாத காரணத்தால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கிய ரூபா 20,563,940 ஆன வியாபார கடன்களில் 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக அறவிடப்படாது நிலவும் ரூபா 2,755,237 ஆன 45 கடன் மீதிகளிற்குரிய சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. | அறவிட முடியுமான கடன்களை அறவிடவும் எஞ்சிய கடனை பதிவழிக்கவும் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | அனைத்து கடன்களையும் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.28 வடமத்திய மாகாண நூலக சேவைகள் சபை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நீண்ட காலமாக நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்திருந்த ரூபா 2,000,000 ஆன தொகையை பயன்படுத்தி வடமத்திய மாகான நூலக சேவைகள் சபை நிறுவப்பட்டதால் அடைந்துக்கொள்ள எதிர்பார்த்த நோக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | மாகான நூலக சேவைகள் சபை நிறுவப்பட்டதால் அடைந்துக்கொள்ள எதிர்பார்த்த நோக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |